Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

15 JUL 2004

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-31 | 15-07-2004 | வியாழக்கிழமை | ஓசை -148

கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்



இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-9943)

## மட்டு. மாவட்ட நிலவரத்தை மிக மோசமாக சித்திரித்துக்காட்ட அரச ஊடகங்கள் முயல்கின்றன!

### - மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்



தமிழீழ விடுதலைப் போராட்டம் வென்றுவிடக்கூடாது என்ற நோக்கில் தமிழர்களுக்கும் அவர்களின் தாயக விடுதலைப் போராட்டத்துக்கும் எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வந்த அரசதரப்பு ஊடகங்கள் மட்டக் களப்பின் தற்போதைய நிலையை தமக்குக் கிடைத்த ஒரு வாய்ப் பாகக் கருதி செயற்பட்டு அங்கி ருக்கும் நிலையை மிகவும் மோசமாக சித்திரித்து வருகின்றன. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நிலவரம் தொடர்பாக ஈழநாதம் பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கருணாவை ஒரு பெரிய மனிதனாகச சித்திரித்து எவராலும் அவரை எதுவும் செய்ய முடியாது என்று செய்திகளை வெளியிட்டுவந்த இந்த ஊடகங்கள் பெரும் தோல்வி அடைந்தன. தமது தோல்வியை மறைப்பதற்காக அவை இப்போது மட்டக்களப்பு நிலவரம் பற்றி பூதாகரமான வகையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இவர்கள் தெரிவிப்பதைப்போல அங்கு நிலவரம் இல்லை.

நாங்கள் எப்போது - எங்கே செல்லவேண்டுமோ அங்கு செல்லக் கூடிய சூழ்நிலை இப்போது மட்டக் களப்பு மாவட்டத்தில் இருக்கிறது. அண்மையில் கருணா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக பி.பி.சி.யில் தான் மட்டக்களப்பில் இருப்பதாக தெரி வித்தார். இது மக்களைக் குழப்பமடையச் செய்வதற்காகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு செயல். கருணா மட்டக்களப்பில் இல்லை. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன்தான் கருணா இருக்கிறார். இதற்கான சகல ஆதாரங்களும் எம்மிடம் இருக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் ஒன்றிற்கு முகம்கொடுக்க ராணுவம் தயார் நிலையில் உள்ளது!

### ராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட



இராணுவத் தளபதியாக பதவியேற்ற பின்னர் சாந்த கொட்டே கொட, நேற்று கடற்படைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தால் அதற்கு முகம் கொடுக்க இராணுவம் தயாராக உள்ளதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.**

இதன்போது கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும், இராணுவ தளபதியும் இணைந்து ஊடக மாநாட்டை நடத்தினர்.

யுத்தம் ஒன்று ஏற்பட்டால் இதனை எதிர்கொள்ள இராணுவத்திற்கும், கடற்படைக்கும் நவீன ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர்கள் இருவரும் தெரிவித்தனர். இதனைக் கொண்டு தரையிலும், கடலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலை தடுக்க முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நிலமை பலப்படுத்தப்பட்டுள்ளது

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிரானில் புலிகளின் தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்தவர் பலி

கிரான் பிரதேசத்திலுள்ள அக்குராணையில் விடுதலைப் புலிகள் நேற்றுப் பிற்பகல் மேற்கொண்ட தாக்குதலில் கருணா கும்பலைச் சேர்ந்த ஒருவர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நபரிடமிருந்து ரி.56 ரக துப்பாக்கி-1, துப்பாக்கி ரவைகள், ரவைக்கூடு அங்கி, கையடக்கத் தொலைபேசி ஒன்று என்பனவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன. புனானை சிறிலங்காப் படை முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முயற்சி செய்த வேளையிலேயே இக் கும்பல் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

## கிழக்கு கொழும்பு சம்பவங்கள் குறித்து கண்காணிப்புக்குழு தீர்ப்பு தயாரிப்பு

### - புலிகள், அரசிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இறுதியாக கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற அரசியல் கொலைகள் மற்றும் கொழும்பில் நடந்த தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஓர் தீர்ப்பை தயாரித்து தற்போது புலிகளிடமும், அரசிடமும் கையளித்துள்ளதென போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் அதிகாரியான வீசா பின்போசா தெரிவித்துள்ளார். எனினும் இது தொடர்பான விபரங்களை வெளியிட அவர் மறுத்துள்ளார்.

## புலிகளைப் பலவீனப்படுத்தி போரை ஆரம்பிக்கும் திட்டத்தில் சிறில. அரசு

### - ஸ்ரற்ஃபோர் நிறுவனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி மீண்டும் போரை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அனைத்துலக போர் திறனாய்வு முன்னறிவிப்பு மையமான ஸ்ரற்ஃபோர் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் கருணாவைப் பயன்படுத்தி இயக்க உறுப்பினர்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவது, அவர்கள் மத்தியில் மோதல்களைத் தோற்றுவிப்பதுடன் இந்த சூழ்நிலை தொடரும் வேளையில், தருணம் பார்த்து போரை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும் ஸ்ரற்ஃபோர் நிறுவனம் தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. போர் நிகழ இருப்பதை முற்கூட்டியே அறிவிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### - யாழ். கல்வியன்காட்டில் -

## ஆட்டோ-சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி; நால்வர் காயம்!

யாழ்.கல்வியன்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற ஆட்டோ-துவிச் சக்கரவண்டி விபத்தில் ஒருவர் பலியாகியிருப்பதுடன் 4பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுமாலை இடம்பெற்ற இவ் விபத்தில் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைச்சேர்ந்த இ.ஸ்ரீராமலிங்கம் (வயது-52) என்பவர் பலியாகியுள்ளதுடன் சம்பவத்தில் 4பேர் காயமடைந்துள்ளனர்.

யாழ்.நகரில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக வேகமாக வந்து கொண்டிருந்த ஆட்டோ எதிரில் வந்துகொண்டிருந்த துவிச்சக்கரவண்டியை மோதியதில் அதில்வந்து கொண்டிருந்தவர் பரிதாபகரமாகப்பலியாகியிருப்பதுடன், ஆட்டோவில் பயணித்த 4பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (33,36)

## லெப்.கேணல் சேனாதிராசாவின் வித்துடல் தாண்டியடி துயிலுமில்லத்தில் விதைப்பு

தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வீரச்சாவடைந்த லெப்.கேணல் சேனாதிராசாவின் வித்துடல் நேற்று மாலை தாண்டியடி மாவீரர் துயிலும்இல்லத்தில் விதைக்கப்பட்டது.

நேற்றுக்காலை கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் இருந்து மண்முனை துறையினூடாக இவரின் வித்துடல் அவரின் சொந்த இடமான செங்கலடிக்கு எடுத்துச்செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பொதுமக்கள், போராளிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் அங்கிருந்து வித்துடல் தாங்கிய பேழை செங்கலடி கறுத்தப் பாலத்தினூடாக கரடியனாற்றிற்கு எடுத்துச்செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக கரடியனாற்றிலுள்ள மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டது . பின்னர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கருத்தரங்கு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான இறுதிச் செயலமர்வு 17.07.2004 (சனி-காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை)அன்று கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள கேம் பிறிஜ்கல்லூரியில் நடைபெறும் கட்டணம் 150/= (4636)

### ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான...

மேரிஜேசுதாசனின் பொது அறிவுத் தகவல்கள் 2003, 2004ஆம் ஆண்டின் நடப்பு விடயங்களோடு கடந்தகால, மாதிரிவினாத்தாள் களையும் கொண்டது. யாழ், வன்னி அனைத்துப் புத்தகக்கடைகளிலும் தற்போது கிடைக்கிறது. (4814)

### தவறிவிட்டது

வசந்தினி செல்வலிங்கம் ஆகிய எனது அ.அட்டை (இல.838121136v)10.07.2004 அன்று விசுவமடுவில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை யில் அல்லது விசுவமடு மாவீரர் படிப் பகத்தில் ஒப்படைக்கவும். (4666)

### தவறிவிட்டது

மீசாலை வடக்கு முத்துத்தம்பி-வீரசிங்கம் ஆகிய எனது அடை யாளஅட்டை இ.போ.ச.அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் இராணுவ அறிமுக அட்டை கிளி நொச்சி கந்தசாமி கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி அல்லது 84கனகாம்பிகைக்குளம் விலா சத்தில் கொடுத்துதவவும். (4821)

### போட்டிப் பரீட்சை வகுப்பு

ஆசிரியர் தெரிவுப்போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் வார நாட்களில் மாலை5-6 வரையும், வார இறுதி நாட்களில் காலை9-12மணி வரையும் வவு னியா புகையிரத நிலையத்திற்கு முன்பாக இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறும். (4635)

### பரீட்சை

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் தேசிய பயிலுநர் கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையால் நடத்தப்படும். தேசிய மட்டத்திலான தேர்ச்சி சான்றிதழுக் கான பரீட்சை இம்மாதம் 24,26,27,28,29,30 ஆகிய நாட்களில் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவன மண்ட பத்தில் நடைபெறு மென கல்லூரி முதல்வர் தி.பிரபாகரன் அறியத்தந் துள்ளார். (15)

# சிறிலங்கா இராணுவத்தால் கொலைசெய்யப்பட்ட

# மாணவன் சஞ்ஜீவனின் நினைவு நாள் அனுஷ்டிப்பு

சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட யாழ் இந்துக கல்லூரி மாணவன் சஞ்ஜீவனின் நான்காம் ஆண்டு நிறைவு தின நிகழ் வுகள் நேற்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

பொதுச்சுடரினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன், யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக் குமார் யாழ். பல்கலைக்கழக ஊழி யர் சங்க இணைப்பாளர் கனகராஜ், யாழ். மாவட்ட தமிழ் மாணவ ஒன்றியத் தலைவர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப் பாளர் செழியன் ஏற்றி வைத்தார். சஞ்ஜீவனின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அவரது தந்தையார் ஏற்றி வைக்க, மலர்மாலையினை தாயாரும் மற்றும் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பா ளர் எழில் ஆகியோரும் அணி வித்ததைத் தொடர்ந்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன. நினைவு ரையினை தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், தமிழ் மாணவர் சங்க துணைத் தலைவர் குகேந்திரன், யாழ். பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில், பல்கலைக்கழக ஊழியர் சங்க இணைப்பாளர் கனகராஜ் ஆகி யோர் நிகழ்த்தினர். நினைவுரையில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவிக்கையில் 98,99, ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் மக்களும் மாண வர்களும் சிறிலங்கா அரசுக்கு எதிராக துணிச்சலோடு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்ட காலம் அக்காலகட்டத்தில் துணிச்ச லோடு நின்று செயற்பட்ட மாணவர் களில் ஒருவர் சஞ்ஜீவன். பளைப் பகுதியில் மக்களை மனித கேட யங்களாகப் பயன்படுத்தி சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முற்பட்ட போது அம்மக்களை மீட்கும் பணி யில் துணிச்சலோடு முன்னின்று உழைத்தவன் இம்மாணவன் சஞ்ஜீவன் எனக்குறிப்பிட்டார். (36)


### மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து) வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடுதல்

மேற்படி புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்த மான வெதுப்பக உற்பத்தி நிலையம் குத்தகைக்கு விடப்படவுள்ளது. எனவே இவ் உற்பத்தி நிலையத்தை குத்தகைக்கு பெற விரும்புவோர் எதிர்வரும் 2004.07.31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்.


### சாவு அறிவித்தல்



தோற்றம் 05 ★ 03 ★ 1985

மறைவு 07 ★ 07 ★ 2004

### அன்னலிங்கம் ஜெயந்தன்

புதுக்குடியிருப்பு சிவநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியா திருச்சியில் வசித்தவருமான திரு. அன்னலிங்கம் சந்திரா அவர்களின் மகனான ஜெயந்தன் (ஜெயா) என்பவர் 07.07.04 அன்று இந்தியாவில் அகால மரணமானார். இவர் முத்துக்குமார் பத்மாவதியின் அன்புப் பேரனும், செந்தில்குமார் (லண்டன்), அனித்தா (இந்தியா) ஆகியோரின் சகோதரனும் ஆவார். இவரின் இறுதிக் கிரியைகள் 13.07.2004 அன்று செவ்வாய்க்கிழமை (இந்தியாவில்) பி.ப.3.00 மணிக்கு நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:-
அன்னலிங்கம் குடும்பத்தினர்
(சுவிஸ், இந்தியா)

(சி-9144)

# இரு கொடியின் இரு மலர்கள்

**12ஆம் ஆண்டு நினைவுடன்**

தாயின் மடியில் 31 – 08 – 1978



தாயக மடியில் 23 – 11 – 1992



**06ஆம் ஆண்டு நினைவுடன்**

தாயின் மடியில் 25 – 06 – 1980



தாயக மடியில் 15 – 07 – 1998

**வீரவேங்கை . வீரமணி / ஜெனா**

மகாலிங்கம் சுதர்சன்

மட்டுவில் - வடக்கு, சாவகச்சேரி.

(150 காவலரண் தகர்ப்பின் போது)

**2ம் லெப். முகிலரசி / கலையரசி**

மகாலிங்கம் சுதர்சினி

மட்டுவில் - வடக்கு, சாவகச்சேரி.

(ஜயசிக்குறு எதிர்ச் சமரின் போது)

நெஞ்சு கனக்கும் வேதனையூடே
நெஞ்சுரம் கொண்டே விடுதலை நீ சுமந்து
சமராடி வீழ்ந்தவரே விரைந்துமைத் தேடுகின்றேன்
புன் சிரிப்பை யெப்போதும் உதிர்த்திடும்
என்னி(ல்)லையவனே "வீரமணி" அமைதியுடன்
அள்வுப்பேச்சே உன்னியல்பு என்று கொண்டிருந்திட்ட
என்னி(ல்)லையவளே "முகிலரசி" இயற்பெயருடன்
இறுதி மூச்சுவிடும்வேளை நீவிர் பட்ட விழுப்புண்ணிலும்
ஒற்றுமையானவரே என் உடன் பிறவிகளே
உங்கள் கால்கள் தேடிய எல்லையை அடைந்திடும் வரை
உங்கள் கரங்கள் ஏந்திய துப்பாக்கியை எடுத்து
உங்கள் நெஞ்சம் சுமந்த இலட்சியத்தை சுமந்து

உங்கள் நாவுகள் சொல்லத் துடித்த
தேசிய கீதத்தை சொல்வதற்காய்
நீங்கள் சுவாசிக்க நினைத்த சுதந்திரக் காற்றைத்தேடி
உங்கள் கண்கள் கண்டகனவுகளை நினைவாக்க
உங்கள் செவிகள் மடுத்த அதே கட்டளையின் கீழ்...
யானும் உமை நோக்கித்தான்...
உங்கள் ஆத்மசாந்திக்கான என் வீரவணக்கம் மட்டுமன்று
உங்களது பாதையில் உம் பிஞ்சுப் பாதங்கள்–பின்
தொடராய் நடந்திடுவேன் என்றொரு மெய்ப்பை நான்...
உம்முடன் நின்று களமாடி வீழ்ந்தவர்க்கு எம்
தலை தாழ்ந்த என் வீரவணக்கம்....

உங்கள் நினைவுடன் அன்புடன்
அண்ணா போராளி

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

(4818)

# பாக்தாத்தில் கார்க் குண்டுத்தாக்குதல்

# 10 பேர் உடல் சிதறிப்பலி; 40 பேர் காயம்!

## -இம் மாதத்தில் நடந்த பாரிய சம்பவம்



பாக்தாத்தில் பச்சை வலயம் என அழைக்கப்படும்பகுதியின் நுழைவாயிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து புகை எழும்பும் காட்சி. இப்பிரதேசம் அமெரிக்க இராணுவ அதிகாரிகளின் தலைமையகமாக இருந்து இப் போது அமெரிக்க பிரிட்டிஷ் தூதுவர்களின் வாசஸ்தலமாக உள்ளது.

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம் பெற்ற கார்க் குண்டுத்தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர். அத்தோடு வாகனங்கள் பலவும் சேதமடைந்தன.**

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளிடமிருந்து இடைக்கால ஈராக்கிய அரசு கடந்த மாதம் 28 ஆம் திகதி நிர்வாகத்தை பொறுப்பேற்ற பின்னர் ஈராக்கில், இடம் பெற்ற மிகப் பெரிய கெரில்லாத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

ரைகிறீஸ் நதிக்கு அருகே பயணிகளை இறக்கிவிட்டு செல்வதற்க்காகக் கார்கள் வரிசையாக நின்ற வேளை சனநெருக்கடியான இடத்தில் இக்குண்டு வெடித்துள்ளது.

இப்பிரதேசத்தில் அரசாங்கக் கட்டடங்கள். அமெரிக்க பிரிட்டிஷ் தூதரகங்கள் மற்றும் பல வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களின் அலுவலகங்கள் என்பன அமைந்துள்ளன.

தற்கொலையாளி வாகனத்திற்குள் இருந்துகொண்டு குண்டை வெடிக்கச் செய்ததாக அமெரிக்கப் படைவீரர்கள் கூறுகின்றனர்.

தீவிரவாதிகள் தாம் பணயமாக வைத்திருந்த இரண்டு பல்கேரிய நாட்டு ட்ரக் வண்டிச் சாரதிகளில் ஒருவரை கொன்றுவிட்டதாக செய்திகள் வெளியான சில மணித்தியாலயங்களின் பின்னர் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




பிலிப்பைன்ஸ் போலந்துப்படையினர் ஈராக்கின் கர்பலா புனித நகரில் உள்ள மொக்வராயாம் பள்ளி வாசலில் நுழைவாயிலில் காவற்கடமை புரியும் காட்சி.

## சீனா முதலிடம்!

(பெய்ஜிங்)

உலகின் சீனாவில் தான் அதிகளவிலான கடத்தல்கள் நிகழ்வதாக ஐக்கிய நார்டுகளின் சிறுவர் நிதிய அறிக்கை கூறுகின்றது. கடந்த வருடம் இரண்டு இலட் சத்து 50 ஆயிரம் பெண்களும், குழந்தைகளும் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

# திருமண வீட்டினுள் பாரஊர்தி புகுந்தது!

## -17 பேர் பரிதாப மரணம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் சிமெந்து ஏற்றி வந்த பார ஊர்தி ஒன்று திருமண வீடொன்றினுள் புகுந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேசியாவின் மத்திய யாவா மாநிலத்திலுள்ள அம்பரவாவில் திருமண நிகழ்வு நடந்தது கொண்டிருந்தது இதன் போது சிமெந்து ஏற்றி வந்த பாரஊர்தி ஒன்று தடம் மாறித் திருமண வீட்டினுள் புகுந்ததில் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

# பல்கேரிய நாட்டு பணயக்கைதி ஈராக் தீவிரவாதிகளால் படுகொலை

## மற்றொருவரைக் கொலை செய்ய அச்சுறுத்தல்

(பாக்தாத்)

ஈராக்கியத் தீவிரவாதிகள் பல்கேரியப் பணயக் கைதிகளில் ஒருவரை நேற்று படுகொலை செய்துள் ளனர்.

ஈராக்கிலுள்ள சிறைக்கைதிகளை அமெரிக்க இராணுவம் விடுதலை செய்ய வேண்டும் என்பதே தீவிரவாதிகளின் எச்சரிக்கையாக இருந்தது.

24 மணித்தியால அவகாசத்தில் ஈராக்கிய சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை என்பதனால் ஒருவரைக் கொலை செய்துள்ளதாகத் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

இதேபோல் அடுத்த 24 மணித்தியாலயத்தில் ஈராக் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படாது விட்டால் இரண்டாவது பல்கேரியரையும் கொலை செய்யப் போவதாக மீண்டும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஈராக்கில் 420 பல்கேரிய துருப்புக்கள் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

பல்கேரியரின் விடுதலை தொடர்பாக பல்கேரிய சிரேஷ்ட இராஜதந்திரிகள் பாக்தாத்திற்கு திங்கட்கிழமை சென்றிருந்தனர்.

பல்கேரிய வெளிவிவகார அமைச்சர் இந்த விடயம் குறித்துத் தம்மால் எதுவும் கூறமுடியாது என்று கூறியுள்ளார்.

# இஸ்ரேலிய தடுப்புச்சுவரை அகற்ற ஐ.நா.வில் நிர்ப்பந்தம் அதிகரிப்பு!

## –தீர்மானம் விரைவில் நிறைவேறலாம்

பலஸ்தீனத்தின் மேற்கு பகுதியில் இஸ்ரேல் கட்டியுள்ள தடுப்புச் சுவரை இடிக்க இஸ்ரேலை இணக்க வைப்பதற்கு ஐ.நா.சபை தீர்மானம் இயற்றும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

ஆனால் சர்வதேச நீதிமன்ற தீர்ப்பை ஏற்க முடியாது என்றும் தடுப்புச் சுவரை இடிக்க முடியாது என்றும் இஸ்ரேல் மறுப்பு கூறியுள்ள நிலையில் இஸ்ரேலை நிர்ப்பந்திக்கும் முகமாக ஐ.நா.சபை தீர்மானம் இயற்றும் என்று கருதப்படுகின்றது.

191 நாடுகளைக் கொண்ட ஐ.நா. சபையில் உள்ள அரபுநாடுகள் அனைத்தும் தடுப்புச் சுவரை இடிக்க வேண்டும் என்று ஐ.நா.சபையிடம் கோரியுள்ளன.

ஆனால் ஐ.நா.சபை தீர்மானம் கொண்டு வருமானால் மட்டும் இஸ்ரேலைக் கட்டுப்படுத்த முடியாது.

பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே இஸ்ரேலை கட்டுப்படுத்த முடியும்.

ஆனால் அமெரிக்கா வீட்டோ மூலம் பாதுகாப்பு சபையில் தீர்மானத்தை இரத்துச் செய்துவிடும் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

# இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டம் சீனாவில் அறிமுகம்

(பெய்ஜிங்)

சீனாவில் இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

சீனாவில் இயற்கை அனர்த்தம் காரணமாக நாளொன்றிற்கு ஒரு கோடி ஒன்பது இலட்சம் மதிப்புள்ள சேதம் ஏற்படுவதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதனால் இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டத்தை சீனா அறிமுகப்படுத்தவுள்ளது.

# ஆறு அம்சங்கள் தொடர்பாக இந்தியா–பாகிஸ்தான் பேச்சு

## யூலை 28 முதல் ஆரம்பம்

இந்தியாவும் பாகிஸ்தானும் எதிர் வரும் 28 ஆம் திகதி பேச்சுக்கள் நடத்தவுள்ளன. போதைப் பொருள் தடுப்பு, பயங்கரவாத முறியடிப்பு, பொருளாதாரம், வர்த்தக ஒத்துழைப்பு ஆகியவை உள்ளிட்ட ஆறு அம்சங்கள் பற்றியே இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவது என்று முடிவு செய்துள்ளன.

முதலில் அதிகாரிகள் மட்டத்தில் தொடங்கிப் பின்னர் வெளியுறவுச் செயலர்களும் பேச்சுக்களில் கலந்து கொள்வதாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் 25 ஆம் திகதி இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் பேச்சு நடத்தவுள்ளனர் என்று இந்திய வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.



ஈராக்கில் பிணைக்கைதியாக வைக்கப்பட்டிருக்கும் பிலிப்பைன்ஸின் அங்லோ டெலா கிறஸ்ஸினுடைய படங்களை அவரது உறவினரான குழந்தை ஜேசி நிகொல்லேக் முத்தமிடுகின்றார்.

# 2ஆவது இடத்தில் சனாதிபதி மேகவதி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் நடைபெற்ற முதலாவது நேரடி சனாதிபதித் தேர்தலில் 61 வீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஹூடொஜோனோ முப்பத்து மூன்று சதவீத வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கின்றார். சனாதிபதி மேகவதி 2 ஆம் இடத்திலும் முன்னாள் இராணுவத்தளபதி ராண்டோ 3 ஆம் இடத்திலும் இருக்கின்றார்கள்.

# பிலிப்பைன்ஸ் படையினரை திருப்பியழைக்கும் பணி ஆரம்பம்

(மணிலா)

ஈராக்கில் பணிபுரியும் பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் படிப்படியாக வாபஸ் பெறப்படும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிலிப்பைன்ஸ் தனது துருப்பினரை திருப்பியழைக்க வேணடும் இல்லையேல் பிலிப்பைன்ஸ் வாசி சிரச்சேதம் செய்யப்படுவார் என்று ஈராக் தீவிரவாதிகள் எச்சரிக்கை செய்திருந்தமை தெரிந்ததே.

ஈராக்கில் பிலிப்பைன்ஸ் துருப்புக்கள் 4000 பேர் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

பிலிப்பைன்ஸின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா அதிருப்தி வெளியிட்டுள்ளது.




ஈராக்கில் தீவிரவாதிகளினால் பிணைக்கைதியாகப் பிடிபட்டிருக்கும் பிலிப்பைன்ஸின் அங்லோ டெலா கிறஸ் பற்றிய தகவல்களை அரசு முரணாக வழங்கியதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர்.

# சீரற்ற 3 ஆம் வாய்க்கால் பாலத்தால் தொடர்ந்து வாகன விபத்துக்கள்

## பாலத்தை சீரமைக்க மக்கள் கோரிக்கை

(வட்டக்கச்சி)

**வட்டக்கச்சி 3 ஆம் வாய்க்கால்பாலத்தின் இரு மதகுகளும் சேதமுற்றும் முற்றாக உடைந்துள்ளதால் வீதியும், பாலமும் ஒரே மட்டத்தில் உள்ளது. இப்பாலத்தின்வழியே செல்லும் வாகனங்கள் தொடர்ந்து விபத்துக்குள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.**

கடந்த சில நாட்களில் நான்கு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 10.07.2004 அன்று இரவு 7.30 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து இப்பாதை வழியாக வட்டக்கச்சி நோக்கி ஓட்டோ வாகனத்தில் குடும்ப சகிதமாகப் பயணம் செய்தவர்கள் இப்பாலத்தினுள் ஓட்டோ தடம் புரண்டதில் காயமடைந்தனர். ஓட்டோ உட்பட அதில் இருந்த ரீவி, டெக் என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன. மற்றும் தொலைபேசி (கான்போன்) நீரில் விழுந்து காணாமற் போயுள்ளது. இப்பாலத்தின் இரு மதகுகளையும் திருத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (12)

# பணியாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனை

மனிதவள மேம்பாட்டுப் பகுதியின் சென்.ஜோன்ஸ் அம்பியுலன்ஸ படைப்பிரிவினருடன் இணைந்து சுகாரத்திணைக்களத்தினூடாக பணியாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனைச் செயற்திட்டத்தைக் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்தில் வாணிபநிறுவனங்களில், உணவுச் சாலைகளில், தங்ககங்களில், சந்தைப்பகுதிகளில், சமயற்கூடங்களில், சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் பல நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள் சமூக மேம்பாடு கருதி இணைக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர், வைத்திய கலாநிதி த. சத்திய மூர்த்தி நேரடியாக இப்பரிசோதனைகளையும் செய்து வருகின்றார்.

கடந்த மூன்று மாதகாலத்தில் மட்டும் 15 இற்கு மேற்பட்டவர்கள் இப்பரிசோதனைச் செயற்திட்டத்தில் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வே வைத்தியரால் பூநகரியில் பற்சிகிச்சை

பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையன்று தமிழீழ சுகாதாரசேவையினரின் ஒழுங்கமைப்பில் நோர்வேயிலிருந்து வருகைதந்த விசேட பல் வைத்தியர் அவர்களி னால் 107 நோயாளிகளுக்கு பல்பிடுங்குதல், பல் அடைத்தல், பல் சுத்தம் செய்தல் போன்ற சிகிச்சைகள் நடாத்தப்பட்டதோடு பாடசாலை மாணவர்களுக்கு பல் சம்பந்தமான கருத்தூட்டல்களும் நடாத்தப்பட்டது.



படம் சோதி

கிளிநொச்சியில் இடம் பெற்ற மாஜாஜால வித்தையில் மாணவி ஒருவரின் தலையில் தீ மூட்டி தண்ணீரைச் சுடவைக்கும் காட்சி.

# உடுப்புக்குள உப்புமாவெளியில் பொது நோக்கு மண்டபம் திறப்பு

யு.என்.எச் சீ.ஆர் நிதி உதவியுடன் போறூட் நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வழிகாட்டலுடன் முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட உப்பு மாவெளி பொது நோக்கு மண்டபத்திறப்புவிழா கடந்த 8ஆம் திகதி காலை 10.00மணிக்கு முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத் தலைவர் திரு.முருகேசு தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை உப்பு மாவெளி கிராமஅலுவலர் திரு. பரஞ்சோதி, கமக்கார அமைப்புத் தலைவர் கேபேட் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியினை அளம்பில் பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. யாழ்.மன்னன் ஏற்றி வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை மு.ம.ந.பு சங்கப்பணியாளர் கேதீஸ்வரன் ஏற்றினார்.

மு.ம.ந.பு.சங்கக்கொடியினை மு.ம.க சங்க இணைப்பாளர் திரு. நிவே காந்தன் ஏற்றினார். பெயர்ப் பலகையினை கடற்புலிகளின் அரசதிணைக்களத் தொடர்பாளர் சிலம்பரசன் திரை நீக்கம் செய்து வைத்தார்.மண்டபத்தினைபோறூட் நிறுவன வன்னித் திட்டமுகாமையாளர் திரு.ஆனேபொலறஸ் நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார்.

ஆசியுரையினை உப்பு மாவெளி கிராம அலுவலர் திரு. பரஞ்சோதி நிகழ்த்தினார். சிறப்புரைகளை கடற்புலிகளின் அரசதிணைக்களம் தொடர்பாக திரு. சிலம்பரசன், உடுப்புக்குளம் தமிழ்வித்தியா லய அதிபர், நிவேகாந்தன், போறூட் நிறுவன வன்னித்திட்ட முகாமையாளர் ஆனேபொலறஸ், ஆகியோர் நிகழ்த்தினார்கள்.நன்றியுரையினை நேசன் முன்பள்ளி ஆசிரியர் திருமதி பவானி நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பெருமளவான கிராம மக்கள். அரச, அரச சார்பற்ற நிறுவனத்தினர் கிராம அலுவலர் , பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் கடற்புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், முல்லை மக்கள் நலன்புரிச்சங்கப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## காணியற்றோர் பதிவு செய்க

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தில் காணி இல்லாதவர்களைக் கிராமசேவகரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. இது பற்றிய மேலதிக விபரங்களைக் கிராமசேவகரிடம் பெற்றுக் கொள்ளலாமென அறிய முடிகின்றது. (15)

## கண்டெடுப்பு

செபமாலை- சந்திரகுமாரி கேப் பாப்பிலவு அ.த.க. பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுபவரின் முக்கிய ஆவணங்களும், உடுப்புக்களும் அடங்கிய 'கிற் பாக்' பேருந்தில் கண்டெடுக்கப்பட்டு தற்போது முல்லைத்தீவு பேருந்து நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார்கள். முல்லைத்தீவு பேருந்து நிலையத்தினர். (20)

- முல்லை.வைத்தியசாலையின் -

# தண்ணீர்த் தொட்டி வேலை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான தண்ணீர்த் தொட்டி அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும், அது தொடர்பான எந்த வேலையும் இடம்பெறவில்லை என முல்லைத்தீவு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் து.வி.ஜெயக்குலராசா அவர்களை எமது புதுக்குடியிருப்பு செய்தியாளர் சந்தித்தபோது மிகவும் வேதனையுடன் தெரிவித்தார்.

யுனிசெவ் நிறுவனத்தால் மேற்படி வேலைக்கென 2003 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இன்றுவரையும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமலுள்ளமையால் 2004 ஆம் ஆண்டிற்கு யுனிசெவ் நிறுவனம் நிதியுதவியினை வழங்கமாட்டாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (08)



உலக வங்கித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட ஆனந்த நகர் கிரரமத்தில் 50 வீடுகள் கட்டும் திட்டத்தினை கிளி. மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் நேற்று அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைப்பதனை படத்தில் காணலாம். (படம்:- சோதி)

# வைத்திய கலாநிதி கெங்காதரன் நோயாளரைப் பார்வையிடுவார்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - வைத்திய கலாநிதி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மகப்பேற்று நிபுணராகக் கடமையாற்றிய கெங்காதரன் அவர்கள் வெளிநாடு சென்ற காரணத்தால் கடந்த சில மாதங்களாக நோயாளர்களைப் பார்வையிடவில்லை. எதிர்வரும் 15 ஆம் திகதி (வியாழக்கிழமை) தொடக்கம் வழமை போல நோயாளர்களைப் பார்வையிடுவாரென மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# துணுக்காய், புதுக்குடியிருப்பு,வட்டக்கச்சி முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப்படும் "செந்தமிழினி" "சேரமான் சாஜி" ஆகிய முன்பள்ளிகளின் திறனாய்வு விழா 09.07.2004 அன்று பி.பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது..

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மங்கல விளக்கினை ஏற்றிவைக்க தேசியக் கொடியினை உருத்திர. புரம் வலயப் பொறுப்பாளர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து அகவணக்கமும்,ஏனைய கொடிகளும், ஏற்றப்பட்டன. பின்பு நிகழ்வுகள் ஆரம்பமானது. இறுதியாக சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் திரு. ராஜன் அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து பரிசளிப்புடன் விழா முடிவடைந்தது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடாத்தப்படும் "கானகன்" "ஜமுனன்" ஆகிய முன்பள்ளிகளின் திறனாய்வுவிழா கடந்த திங்கட் கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் திரு. கணேசபிள்ளை கலந்து கொண்டார். தேசியக் கொடியினை உருத்திரபுரம் வலயப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கமும் ஏனைய கொடிகளும் ஏற்றப்பட்டன. பின் நிகழ்வுகள் ஆரம்பமாகின இறுதியாக பரிசில்கள் வழங்கப்பட்டன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 15 முன்பள்ளிகளின் திறனாய்வு விளையாட்டுப் போட்டி நிகழ்வு பாண்டியன்குளம் மகாவித்தியாலய முன்றலில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் த.சிவா தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வின் மங்கல விளக்கினைபாண்டியன்குள மகாவித்தியாலய உபஅதிபர் திருமதி. ர.சிவலிங்கம், மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ந.கேதீஸ்வரன், மாந்தை கிழக்கு பிரதேச முன்பள்ளி, தலைவர் கனகலிங்கம் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை பாண்டியன் குளப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.கண்ணமுதன் ஏற்றிவைத்தார்.

புதுக்குடியிருப்பு சிவநகர் கப்டன் திலக் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப்போட்டி கடந்த திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு முன்பள்ளித்தலைவர் ஜெயசீலன் தலைமையில் இடம் பெற்றது.

தேசியக்கொடியை சிவநகர் வலயப்பொறுப்பாளர் வன்னியன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கப்டன் திலக் அவர்களின் உருவப்படத்துக்கு அவரது தாயார் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து விளையாட்டுக்கள் இடம்பெற்றன. சிறப்பாக உடற்பயிற்சியும், வினோதஉடை நிகழ்வும் இடம்பெற்றது.

வட்டக்கச்சி புனித சூசையப்பர் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியானது தலைவர் சிவனேசன் தலைமையில் கடந்த திங்கட் கிழமை மாலை 2.00 மணிக்கு ஆரம்பமானது.

தேசியக்கொடியினை போராளி சோழநிலவன் (வலயப் பொறுப்பாளர்) அவர்களும் முன்பள்ளி மேம்பாட்டுக் கொடியினை பிரபா முன்பள்ளி ஆசிரியர் சந்தியேஸ்வரி அவர்களும் முன்பள்ளிக் கொடியினை திருமதி அருள்தாஸ் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. சிறப்பு நிகழ்வாக சிறார்களின் வினோத உடையும், ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம் பெற்றன.இந்நிகழ்விற்கு பலதரப்பட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (08,12,24,)

# அரசியலமைப்பைமாற்றும் நடவடிக்கையை துரிதப்படுத்த சிறிலங்கா அரசு முயற்சி

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு மாகாணசபைத் தேர்தலில் கிடைத்துள்ள வெற்றியையடுத்து, அரசியலமைப்பை மாற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாக சிறிலங்காவின் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டுக்கான தமது பூரண ஆதரவை மாகாணசபைத் தேர்தலின் மூலம் இரண்டாவது தடவையாகவும் மக்கள் வழங்கியுள்ளதாக மங்கள சமரவீர கூறியுள்ளார். பெரும்பான்மையான மக்களின் ஆதரவு அரசாங்கத்திற்கே உண்டு என்ற யதார்த்த நிலையை உணர்ந்து, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க சகல எதிர்க்கட்சிகளும் முன்வர வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பாக திட்டமிட்டபடி அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், தற்போதையதேர்தல் முறைமையை முன்னுரிமை அடிப்படையில் மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நடைமுறையில் உள்ள அரசியலமைப்பை மாற்றுவதானது சிறுபான்மை இனங்களின் நலன்களைப் பாதிக்கும் ஒன்றாகவே அமையுமென சிறுபான்மைக் கட்சிகள் பல சுட்டிக் காட்டியுள்ளதுடன், இதற்கான கடுமையான எதிர்ப்பையும் அவை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைவரை நல்லூர்துர்க்கா மணி மண்டபத்தில் மூன்று நாட்களும் பி.பகல் 3.00- 8.30மணி வரை நடைபெறவுள்ளது.இந் நிகழ்வில் பரிசளிப்பு, கலைஞர் கௌரவிப்புகலைவிழா என்பனவும் நடைபெறவுள்ளது.

# ஐ.ம.சுதந்திர முன்னணியின் மா.சபை உறுப்பினர் மீது தாக்குதல்

(கொழும்பு)

மத்திய மாகாண சபை ஐக்கிய சுதந்திர முன்னணியின் வேட்பாளர் வெற்றி பெற்று வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் அவரையும், அவரது கார்ச்சாரதியையும் இனந்தெரியாதோர் தாக்கியுள் ளனர்.

தற்பொழுது காயமடைந்த இவாகள் அங்குரன்கெத்த வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலை நடத்திய வர்கள் பற்றி எனக்குத் தெரியாதென சிகிச்சை பெற்றுவரும் வேட்பாளர் ஜயரத்தின திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# சிறிலங்காவின் 6 மாகாண சபைகளின் முதல்வர்கள் நாளை பதவியேற்பு

(கொழும்பு)

மாகாண்சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆறு மாகாணசபை முதலமைச்சர்களும் நாளை வெள்ளிக்கிழமை பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

மேல், மத்திய, தென், வடமத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாண முதலமைச்சர்களே நாளை பதவியேற்கவுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. சனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.எனினும் மாகாணசபை அமைச்சுப் பொறுப்புக்களை ஒதுக்கீடு செய்வது குறித்து மற்றுமொரு சுற்றுப்பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றுள்ளது.

இதேவேளை மாகாண சபைகளின் முதலமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொள்ளவுள்ள ஆறுபேரும் மற்றுமொரு சுற்றுப் பேச்சுக்காக இன்று அழைக்கப்பட்டுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்களை நகர்த்த சனாதிபதி ரணிலைச் சந்திப்பார்!

## –சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் துரிதமாக ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சனாதிபதி வெகுவிரைவில் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களை அழைத்து இது குறித்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் உள்ளார்.

இதனை நேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிச் செயலரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# கொழும்பில் டெங்கு நோயாளர்கள் ஜூன் மாதம் இரு மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் கடந்த மாதத்தில் டெங்கு நோய் அதிகளவு பரவியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித் துள்ளது.

கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களெனச் சந்தேகிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் நிகால் அபேயசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து கடந்த வார இறுதிவரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் சுகாதார அமைச்சினால் இனங்காணப்பட்டுள்ளனர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 51பேர் நாட்டில் இதுவரை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

# ஐ.ம.சு.முன்னணி அரசுக்கு இ.தொ.கா.ஆதரவு தரமறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைவதா, இல்லையா, என்பது பற்றி இறுதிமுடிவெடுப்பதற்காகவும், மாகாண சபைகளில் எவ்வாறு செயற்படுவது என்பதைத் தீர்மானிப்பதற்காகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்குழு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவசரமாகக் கூடியது.

இ.தொ.கா. தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மத்திய ஆட்சியிலும், மாகாண ஆட்சிகளிலும் இ.தொ.கா. வின் பங்களிப்பை ஆளுங் கட்சி கோரி வரும் நிலையில் இன்றைய கூட்டத்தில் அது தொடர்பாக ஆக்கபூர்வமாக விவாதிக்கப்பட்டதாகவும், இறுதியில் தற்போதுள்ள நிலைப்பாட்டிற்கு மாறான முடிவுகள் எதையும் எடுப்பதற்கான எந்தத் தீர்மானமும் எடுக்கப் படவில்லையென இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவித்தன.ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தற்போது ஆதரவு வழங்குவது குறித்து எந்த முடிவும் எட்டப்படவில்லையென்றும், இது குறித்து இனி விவாதிப்பதில்லை என இறுதியில் முடிவு எடுக்கப் பட்டதாகவும் கட்சியிலுள்ள எம்.பி. முத்து சிவலிங்கம் ஊடகவியலாளரிடம் தெரிவித்துள்ளார். மலையக மக்களின் பல்வேறு சமூகப் பிரச்சினைகள், இன்னல் கள், நடைமுறைச் சிக்கல்கள் பற்றி மிக விரிவாக இச்சந்திப்பில் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.இ.தொ.கா.வின் அங்கத்தவர்கள் அனைவரும், கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் எடுக்கும் எந்த முடிவிற்கும் இசைந்து செயற்பட இணங்கியுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

# பிக்குவைக் கட்டிவைத்து விகாரையில் கொள்ளை

(கொழும்பு)

வீரகெட்டிய கசாகல பௌத்த விகாராதிபதி ஆனந்த தேரரைத் விகாரையில் கட்டி வைத்து விட்டு பெறுமதிமிக்க பௌத்த விக்கிரகம் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

இனந்தெரியாதோர் ஏழுமுறைகள் இந்த விகாரையைச் சேதப்படுத்தி உள்ளனர். சில பொருள்களும் களவாடப்பட்டன. இம்முறை என்னைக் கட்டிவைத்து விட்டு விலைமதிக்க முடியாத பௌத்த விக்கிரகம் ஒன்றைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளதாக விகாராதிபதி தங்கால பொலிசிற்கு அறிவித்துள்ளார்.

# கலந்துரையாடல்

(கொழும்பு)

நாற்பத்தைந்து பிரபல தேசியப் பாடசாலை அதிபர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று கல்வி அமைச்சில் இன்று நடைபெறும். தரம் ஒன்று வகுப்பிற்கான அனுமதி தொடர்பாகவே இக் கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது.

# குவைத் வேலைவாய்ப்புத் தொடர்பாக நூறுபேரை ஏமாற்றியவர் தேடப்படுகின்றார்

குவைத் வைத்தியசாலையொன்றில் 40 ஆயிரம் ரூபா மாதாந்த சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதாகக் கூறி நூறு பேரை ஏமாற்றிய பெண் ஒருவரைத் தேடி எப்பாவல பொலிசார் வலை விரித்துள்ளனர்.

இரண்டு குழந்தைகளின் தாயான ஒரு பெண்ணிடமிருந்தும் 50 ஆயிரம் ரூபாவை மேற்படி பெண் பெற்றுள்ளார்.06 மாதங்களுக்கு முன்னர் கட்டாகல என்ற கிராமத்தில் குடியமர்ந்த குறித்த பெண் வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒவ்வொருவரிடமிருந்தும் 80 ஆயிரம் ரூபாவைக் கோரியுள்ளார். முற்பண மாக 50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார். வெளி நாடு செல்பவரின் நன்மை கருதி முன்னேஸ்வரம் தேவாலயத்தில் அர்ச்சனை செய்யப் போவதாகக் கூறிச்சென்ற மேற்படி பெண் தலைமறைவாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது..

# மட்டக்களப்பில் அதிரடிப்படையால் வணிக நிலைய ஊழியர் விபரம் திரட்டல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விசேட அதிரடிப்படையினரால் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் விபரமும் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் பெயர் விபரங்களும் திரட்டப்பட்டன இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

காரணம் ஏதும் கூறாமல் தம்மிடம் இவ் விபரங்கள் திரட்டப்பட்டதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

# யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு காணி பெற்றுத்தர பா.உ. உறுதிமொழி

(வடமராட்சி)

யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவகத்திற்கு நிரந்தரக்கட்டடமொன்றினை அமைக்க ஏதுவாக காணியொன்றினை பெற்று வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.கஜேந்திரன் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் அங்கு விஜயம் செய்திருந்த அவர் மாணவர் அமைப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்தியிருந்தார். அவ்வேளையில் நிறுவகத்திற்கான நிரந்தரக் கட்டடமொன்றினை அமைப்பதற்கான இடத்தின் தேவை தொடர்பாக மாணவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.முன்னரும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்து காணியினைப் பெற்று வழங்குவதாக உறுதியளித்திருந்த போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லையெனச் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்தே யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு உரிய காணியினைப் பெற்று வழங்க நடவடிக்கை எடுப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் மாணவர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

(27)

# நெருப்பாற்றும் பயணத்தில் சாள்ஸ் அன்ரனி ஓர் இலட்சியப் போராளி

**சி.ஜெயதீபன்**

உலகப் போரியல் வரலாற்றில் தமிழீழ விடுதலைப் போர் தனக்கென தனித்துவமான பாதையில் பயணித்து இன்று அனைவரின் கவனத்தையும், அதன்பால் ஈர்த்துள்ளது என்றால் ஒவ்வொரு மாவீரனதும் அர்ப்பணிப்புக்களும், தலைவர் அவர்களின் திட்டமிட்ட சிறந்த நெறிப்படுத்தல்களும், வழிப்படுத்தலும் தான் காரணம். கரந்தடி முறையிலான தாக்குதல்களில் ஆரம்பித்த தமிழீழவிடுதலைப் போர் இன்று மரபு வழிப்படையணிகளின் உருவாக்கத்துடன் மரபு ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்தவளர்ச்சியினை அடைய ஆரம்பகாலங்களில் தலைவருடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர்களில் லெப்டினன்ட்சீலன் (லூக்காஸ்-சாள்ஸ் அன்ரனி/திருகோணமலை) முதன்மையானவன். 1979ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட சீலன் அடிப்படை ஆயுதப் பயிற்சிகளை நேரடியாகவே தலைவர் அவர்களிடம் பெற்றுக் கொண்டான் தலைவருக்கு மிகவும்நம்பிக்கையாகவும், விசுவாசமாகவும் உழைத்த சீலனின் அபூர்வமான ஆற்றல், திறமைகளால் தலைவரின் நம்பிக்கைக்கு உரியவனாக இனங்காணப்பட்டான்.

1979 ஆகஸ்ட் மாதத்தில் சிறிலங்கா சனநாயக சோசலிச குடியரசின் அரசியல்யாப்பின் அடிப்படையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன பதவி ஏற்கும் வைபவம் இலங்கையின அனைத்து பகுதிகளிலும் வெகுசிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. இந்த வகையில் திருமலையிலும் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. திருமலை இந்துக் கல்லூரியில் கல்விகற்றுக் கொண்டிருந்த சீலன் பாடசாலை விஞ்ஞானஆய்வு கூடத்தில் பெற்றுக் கொண்ட, காற்றுடன் தகனம்அடையக்கூடிய "பொஸ்பரசை சிங்கக் கொடியில் மறைத்துவைத்து அந்தக்கொடி எரிப்பின் மூலம் தனது எதிர்ப்பை வெளிக்காட்டிய துணிச்சலாளன்.

விடுதலைப்புலிகளால் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான முதல் தாக்குதல் 1982 ஒக்டோபர் 15ஆம் திகதி யாழ். காங்கேசன் துறை வீதியில்வைத்து ரோந்து சென்ற இராணுவம் மீது நடத்தப்பட்டது. அந்தத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து 303துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. கப்டன் ரஞ்சன், லெப். கேணல் புலேந்திரன் ஆகியோருடன் இணைந்து சீலன் நடத்திய இந்தத் தாக்குதல் அன்றையகாலப் பகுதியில் முதன்மையானதாகவும், அவசியமானதாகவும் இருந்தது. 1982 ஆம் ஆண்டு தலைவர் அவர்களினால் சீலன் தாக்குதல் பிரிவிற்கு நியமிக்கப்படுகின்றான். அவனின் போர் ஆற்றல், சிந்தனைத்திறன் என்பன அவனைச் சிறந்தகெரில்லா வீரனாக உருவாக்கியது. 1982 ஒக்டோபர் 27ஆம் திகதி அதிகாலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தளபதிசாள்ஸ்அன்ரனி தலைமையிலான அணியினரால் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளானது. இத்தாக்குதலில் பல பொலிசார் கொல்லப்பட்டதுடன், ஆயுதங்களும்கைப்பற்றப்பட்டன. சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல் தனது துரோகிகள் அழிப்பு, ரோந்து செல்லும் படையினர் மீதான அதிரடித் தாக்குதல் என்ற நிலையில் இருந்து வலிந்த தாக்குதலிற்கு விடுதலைப் புலிகளை இட்டுச் சென்றதென்றால் மிகையானது அல்ல. விடுதலைப் போரின் ஆரம்பநாட்களில் ஆயுதக் கைப்பற்றல் என்பது விடு தலை விருட்சத்திற்கு நீரூற்றுவது போல போராட்டவளர்ச்சிக்கு உயிரூட்டுவதாக அமைந்தது.

பொன்னாலைப் பாலத்தில் வைத்து சிறிலங்கா கடற்படைக்கு எதிரான முதல் தாக்குதலும், தளபதி சாள்ஸ் அன்ரனியால் நடாத்தப்படுகின்றது. இவ்வாறாக தாக்குதல் முனைப்புப்பெற்றகாலப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலினை நடாத்த சிறிலங்கா அரசு திட்டமிட்டது. அந்தத் தேர்தலினை பகிஸ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் மக்களைக் கேட்டிருந்தனர். சிறிலங்கா அரசாங்கம் இதனை எப்படியாவது நடத்தி முடிப்பது எனக்கங்கணம் கட்டி நின்றது.

1983 மே 18ஆம் நாள் அன்றுதான் தேர்தல் நாள். அதற்கு முன்னர் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து ஏமாந்த படையினர் வாக்குச் சாவடிகளில் புலிகள் தாக்கலாம் என்பதால் பொலிசாரையும், இராணுவத்தினரையும் பெருமளவில் குவித்திருந்தனர். வீதிகள் எங்கும் இராணுவத்தினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். நேரம் மாலையாகிக் கொண்டிருந்தது. தேர்தல் நிறைவடைய 1மணி நேரம்இருந்தது. அந்த 1மணி நேரமும்கழிந்து விட்டால் சிறிலங்கா அரசின் எதிர்பார்ப்பு வெற்றி அளித்துவிடும். அந்த நேரத்தில் கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலை வாக்குச்சாவடி லெப்டினன்ட் சீலன் தலைமையில் தாக்கப்படுகின்றது. லெப்டினன்ட். செல்லக்கிளிஅம்மான் 'கப்டன் ரஞ்சன், லெப்.கேணல் புலேந்திரன்,கேணல் கிட்டு போன்ற மூத்த தளபதிகள் இத்தாக்குதலில் பங்கு கொண்டிருந்தனர். இந்தத் தாக்குதலில் தான் தானியங்கித் துப்பாக்கி ஒன்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். இத்தாக்குதல் முடிந்து போராளிகள் தளம் நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கையில் எதிர்பாராத விதமாக சிறிலங்கா இராணுவ வாகனமொன்று அவ் விடத்திற்கு வருகின்றது. உடனடியாக போராளிகள் வீதியில் நின்று தாக்குதலை நடாத்தியவுடன் அந்தவாகனம் பின்வாங்கிச் செல்கின்றது இந்தச் சம்பவம் அங்கு நின்ற மக்கள் அனைவரையும் வியப்படைய வைத்தது.

இவ்வாறான வலிந்த தாக்குதல்களால் தான் எதிர்பார்த்த இடத்தில் எதிர்பார்த்த சமயத்தில் எதிரி தயார் நிலையில் இருக்கின்ற இலக்குகள் மீது தாக்குதல்களைச் செய்து மகத்தான வெற்றிகளைப் பெற தளபதி சாள்ஸ் அன்ரனியின் தாக்குதல்கள் களமமைத்துத் தந்தது எனலாம். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து ஐந்து வருடகாலத்தில் யாழ். காங்கேசன் துறை வீதியில் ரோந்து அணி மீதான தாக்குதல், பொன்னாலையில் சிறிலங்கா கடற்படைக்கு எதிரான தாக்குதல், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல்,கந்தர்மடத் தாக்குதலென லெப். சீலன் நடத்திய தாக்குதல்கள் பல. இவ்வாறான தாக்குதல்கள் போரியல் பரிணாமத்தில் பெரும் மாற்றங் களை ஏற்படுத்தியது. சாள்ஸ் அன்ரனி மூன்று தடவைகள் விழுப் புண் அடைந்துள்ளான். 1982ஆம் ஆண்டு மறைவிடம் ஒன்றில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தில் நெஞ்சுப் பகுதியில் காயமடைகின்றான். இக்காயம் அவனுக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது. திக்கித்திக்கி அவன் சொன்ன வார்த்தைகள்

"ஆயுதத்தை இடம் மாற்றுங்கோ" என்பதுதான். விடுதலை விருட்சத்தின் ஆணி வேரான ஆயுதங்களை மீட்பதும் அதனை பாதுகாப்பதும் தான் சாள்ஸ் அன்ரனியினது கொள்கையாக இருந்தது. இதனால் தான் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில்காலில் காயமடைந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் "ஆயுதங்களை விடாமஏற்றுங்கோ" என்ற வார்த்தை தான் அவனிடமிருந்து வெளிவந்தது.

மீசாலைப் பகுதியில் அமைந்திருந்த போராளிகளின் மறைவிடம் துரோகி ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு சிறிலங்கா இராணுவத்தினரால் முற்றுகையிடப்படுகின்றது. எதிர்பாராத இந்தத் தாக்குதலிற்கு ஈடு கொடுத்தபடியே முற்றுகை வளையத்தை உடைத்து சாள்ஸ்அன்ரனியும் மூன்று தோழர்களும் வெளியேறிக்கொண்டிருந்த போது, சாள்ஸ்அன்ரனி காலில்காயமடைகின்றான் இதனால் ஓடமுடியாமல் வீழ்ந்த சாள்ஸ்அன்ரனியை தூக்கி செல்ல தோழர்கள் முயற்சி செய்த போதும் களநிலைமை ஏற்புடையதாக இருக்கவில்லை. இராணுவமுற்றுகை இறுக்கம் அடைந்து வருவதை உணர்ந்த சாள்ஸ் அன்ரனி உறுதியான முடிவொன்றை எடுக்கின்றான். "என்னைச்சுட்டுவிட்டு ஆயுதத்துடன் தப்பிச்செல்லுங்கள்" எனக் கட்டளை இடுகின்றான். தோழர்கள் தயங்குகின்றனர். தம்மோடு தோளோடு தோள்நின்ற தோழனைச் சுட்டுவிட்டுச் செல்ல அவர்கள் தயாராகஇல்லை. மீண்டும் சாள்ஸ் அன்ரனி யிடம் இருந்து உறுதியாக கட்டளை இடப்படுகின்றது. கட்டளையை நிறைவேற்ற வேண்டிய மரபிற்கு அமைய, கட்டளைக்கு கீழ்ப்படிந்த சக தோழன் தமதுதளபதியை சுட்டு விட்டு ஆயுதத் துடன் முற்றுகையை உடைத்து வெளியேறுகின்றான். தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்துடன் தப்பிச் செல்லுமாறு கட்டளையிட்டு, போரியல்பரிணாமத்தில் புதியதொரு சகாப்தத்தை சாள்ஸ் அன்ரனி தொடக்கிவைத்து தாயக மண்ணை முத்தமிட்டுக்கொள்கிறான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இரண்டாவதாக வீரச்சாவடைந்த மாவீரன் என்றபெருமையை பெற்று மீசாலைமண்ணின் தளபதி சாள்ஸ் அன்ரனி வீரச்சாவடைகின்றான். இதேபோல் சக தோழனான மூத்த உறுப்பினர் ஆனந்தும் விழுப்புண்ணடைந்து தன் தளபதியின் முடிவினை தானும் எடுத்துக் கொண்டு வீரச்சாவடைகின்றான். மற்றைய இரு தோழர்கள் முற்றுகையினை உடைத்துக்கொண்டு ஆயுதங்களுடன் தளம் திரும்பினர். சாள்ஸ் அன்ரனியின் வித்துடல் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் இராணுவத்தினரின் பெரும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தது. தனதுமகனின் வித்துடலைப்பெற சாள்ஸ் அன்ரனியின் தாயார்முயன்ற போதும் மனித நேயமற்ற சிங்களப்படை உயிரற்ற அந்த உடலைக் கூட கொடுக்காமல்தனது ஆதிக்க வெறியினைக் காட்டியது.ஊர்காவறுறைக்குச் செல்லும் வீதியில் அல்லைப்பிட்டியை அண்டிய கடற்கரையில் எங்கள் வீரத் தளபதியின் வித்துடல் தீயுடன் சங்கமமானது.

தளபதி சாள்ஸ் அன்ரனி உயிரிலும் மேலாக இயக்கத்தையும், ஆயுதத்தையும் நேசித்தான். அவனால் பாதுகாக் கப்பட்ட ஆயுதமும் இரகசியமும், மனோபலமும் தான் இன்று மரபு வழிப்படையணியாக தமிழர் சேனை வளர்ந்து நிற்கின்றது. எமதுவீரத் தளபதியின் இழப்பிற்கு பதிலடி கொடுக்க தேசியத் தலைவர்அவர்கள் முடிவெடுத்து தாக்குதல் திட்டம் தீட்டப்படுகின்றது. இத்தாக்குதலில் தலைவர் நேரடியாகப் பங்கு கொள்கின்றார். லெப். கேணல் விக்ரர், கேணல்கிட்டு, கப்டன் றஞ்சன், கப்டன் றெஜி, லெப்.சந்தோசம், லெப்.கேணல் பொன்னம்மான், லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மான், லெப் கேணல்சுப்பையா அண்ணை போன்ற போராளிகள் பங்கு பற்றிய இத்தாக்குதலானது 1983 யூலை 23 ஆம் திகதி பலாலித் தளத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது இராணுவ ட்ரக் மற்றும் ஜீப்வண்டி மீது திருநெல்வேலி தபாற்பெட்டி சந்தியில் வைத்து இவ் அணியினரால் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன்பெருந் தொகையான ஆயுததளபாடங்களும் கைப்பற்றப்பட்டன. முதன் முதலாக பெருந்தொகையான இராணுவத்தினர்கொல்லப்பட்ட இந்தத் தாக்குதல் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரிய தொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இத்தாக்குதல் சிங்கள பேரினவாத சக்திகளையே குழப்பமடைய வைத்தது.


தலைவர் அவர்களினால் தளபதி சாள்ஸ்அன்ரனி நினைவாக முதல்மரபுவழிப்படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி உருவாக்கம் பெற்றது. பயிற்சி, துணிவு, தந்திரம் என்ற படையணி தாரக மந்திரத்துடன் தமிழீழமெங்கும் வீறுடன் வெற்றி நடைபோடுகின்றது. நாம் ஓயாத அலைகளாகஅடைந்த வெற்றிகளிற்குஎல்லாம் அத்திவாரமாய் அமைந்தது வீரத்தளபதி சாள்ஸ் அன்ரனியின் நாமம் தாங்கி விடுதலைப்படையணியாகமிளிர்கின்றது.





# நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசின் கொள்கையில் மாற்றம் வேண்டும்

லங்காதீப சிங்கள நாழிதழில்
பேராசிரியர் ஜெகான் பெரேரா
மொழியாக்கம் அ. சக்திவேல்



20 வருடகால யுத்தத்தின் பின் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அமைத்ததுடன் இரண்டு வருட காலம் மக்கள் நாட்டில் யுத்தபயமின்றி வாழ்ந்து வந்தனர். இந்த இரண்டு வருட காலத்தில் மிகச் சிரமப்பட்டு இந்த நாட்டின் சமாதானம் நிலை நிறுத்தப்பட்டுள்ள வேளையில் பலர் பல கோணங்களில் இந்த சமாதானத்தை அனுபவிக்கின்றனர். நிச்சயமாக நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு இச்சமாதானம் பெரும் நன்மையை ஏற்படுத்தியுள்ளதென்பதை இந்த நாட்டில் வாழும் சகலரும் ஒத்துக் கொண்டனர். சமாதானத்தை விரும்பாதவர்கள்பல கோணங்களில் இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இது புதுமை அல்ல.

இந்த நாட்டில் இருப்பது இரண்டு சமூகங்களுக் கிடையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை இது எமது நாட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தல்ல. உலகில் பல நாடுகளில் இம்மாதிரி யான இனப்பிரச்சினை கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்த இனப்பிரச்சினை யுத்தமாக அந்த நாடுகளில் ஏற்படவில்லை. இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காலம்காலமாக இழுபட்டு வந்து கடைசித்தீர்வு யுத் தம். இதுவே கடைசி முடிவு என்ற நிலைப்பாட் டுக்கு வந்தபடியால் நாட்டில் கோர அழிவுகள் ஏற்பட்டு நாடு சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது.

இவைகளைப் பார்க்கும் பொழுது மக்கள் மனதில் பல சந்தேகங்கள் ஏற்பட்டு ஒரு பக்கத்துக்குச் சார்பாக மக்கள் இயங்கத் தொடங்கினர். இது இருபது வருட கால யுத்தம் அல்ல. ஐம்பது வருட கால அரசியல் சரித்திரத்தில் ஏற்பட்டுள்ள யுத்தமாகும். இந்த ஐம்பது வருட கால யுத்தத்தை நிறுத்துவதற்கு கடந்த அரசாங்கம் வெற்றியைக் கண்டது. அதாவது சமாதானப் பேச்சு வார்த்தைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இந்த ஐம்பது வருட கால யுத்தத்திற்கு ஈடு கொடுக்க முடியுமா என்று பலர் சிந்தித்தனர். இந்த யுத்த நிறுத்தம் மக்களை ஏமாற்றும் ஒரு வித்தையென நாட்டின் சமாதானத்தை விரும்பாதவர்கள் கூறத் தொடங்கினார்கள்.

இந்த யுத்தத்தினால் இராணுவத்தினர் பெரும் இலாபத்தை ஈட்டினர். விடுதலைப்புலிகள் மாபெரும் எதிர்ப்பு சக்தியாக இராணுவத்துடன் சரிசமமாக யுத்தம் செய்யும் பொழுது இந்தப் போர் நிறுத்த சமாதானத்தை அரசாங்கத்திற்கு நிலை நாட்ட முடியாதென சமாதானத்தை விரும்பாதவர்கள் எண்ணினர்.

ஆனால் விடுதலைப்புலிகளுக்கும ரணில் அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு போர் நிறுத்த ஒப்பந்தம் இந்த நாட்டு மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இதனால் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த இராணுவ காவல் அரண்கள், தடைமுகாம்கள் மக்கள் போக்குவரத்துச் செய்யும் இடங்களிலிருந்து அகற் றப்பட்டன. இதனால் இந் நாட்டு மக்கள் மிக மகிழ்ச்சி அடைந்தனர். யுத்தத்தை விரும்புபவர்கள் பெரும் அதிர்ச்சி அடந்தனர்.விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டது. இதனால் நாடு யுத்த அனர்த்தத்திலிருந்து மீட்கப்பட்டது. இது ரணில் விக்கிரம சிங்கவுக்கு இந்த நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். விடுதலைப்புலிகளின் படை பலமும் ஆயுத பலமும் அதிகமாக இருந்தது இலங்கை அரசாங்க இராணுவத்திற்கு சம பலமாகவே காணப்பட்டது. இந்த நிலையில் சமாதானம் நீடிக்குமா. என சந்தேகப்பட்டவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

மக்கள் நாட்டில் சகல பாகங்களுக்கும் சென்று வருவதற்கு இந்த சமாதான ஒப்பந்தம் வழி வகுத்தது. இந்த நாட்டில் எவரும் இதை மறுக்க முடியாது. இவற்றை நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டுமானால் ஏனைய உலக நாடுகளில் சமாதானத்தின் நடைமுறைகள் என்ன என்பதை நாம் நன்கு ஆராய வேண்டும். நாடுகளில் யுத்தங்கள் ஏற்பட்டு அதற்கான பரிகாரங்களை அந்நாட்டு அரசு எப்படிச் செய்தது. எப்படி வெற்றி கண்டதென்பதை முதலில் நாங்கள் ஆராய வேண்டுமென்பதை ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தலைமைப்பீடம் நன்கு உணர்ந்து நோர்வே நாட்டு அனுசரணையை ஏற்றுக்கொண்டது. இந்த நாட்டின் புத்தி ஜீவிகள் பலர் இதை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பொது மக்களுக்கு இவைகளைப் புரிய வைப்பதற்கான சக்தி அரசாங்கத்திடம் இருக்கவில்லை. அயல் நாடுகளில் ஏற்பட்ட இனப்பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப் பட்டதென்பதை மக்களுக்கு விளக்கமளிக்க அரசாங்கம் தவறி விட்டது. தென்னாபிரிக்கா, கிழக்கு அயர்லாந்தில் ஏற்பட்ட இனப்பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப்பட்டதென்பதை மக்கள் உணர்ந்திருந்தால் இந்த நாட்டு இனப்பிரச்சினை எப்பொழுதோ தீர்ந்திருக்கும். ஆனால் அப்பொழுது இருந்த எதிர்க்கட்சியினர் இந்த இனப்பிரச்சினையை அரசியல் மயமாக்கி இதனால் நாட்டுக்கும் அபாயத்தை ஏற்படுத்தப்போகிறது என நாட்டு மக்களுக்கு படம் பிடித்து காண்பித்தனர். மக்கள் மனதில் சந்தேகங்களை உண்டு பண்ணி அவர்களைத் திசை திருப்பி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினர். இதை எவரும் மறுக்க முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தம், நோர்வே நாட்டின் தலையீடு இவைகள் ஒவ்வொன்றும் மக்களுக்கு பிழையான கருத்துக்களைத் திணித்து, பொய் வாக்குறுதிகளை கூறி ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்து, பொது சன ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்றது. ஆட்சி ஏற்றபின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்க நேரிட்டது. சமாதான நடவடிக்கையால் நாட்டுக்கு ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துக்கூறிய தற்போதைய அரசு தற்போது மக்கள் முன்னிலையில் வருவதற்கு அஞ்சுகிறது. ஓமந்தைக்கு அப்பால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு உள்ளதென்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த அரசாங்கம் எப்படி சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறதோ அதன்படியே விடுதலைப்புலிகளும் அரசியல் பகடைக்காய்களை நகர்த்துவார்கள். வடகிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும அரசியல் நடவடிக்கைகள் யாவும் சர்வதேச சமூகம் ஏற்றுள்ளபடியால் சமஷ்டி ஆட்சி முறையே இதற்குச் சரியான தீர்வு என்பது புலிகளின் வாதமாகும். இந்த சமஷ்டிமுறை சம்பந்தமாக அரச தரப்பிலிருந்து சரியான முடிவு முன்வைக்கப்படவில்லை.

எனவே விடுதலைப்புலிகள் அரசாங்கத்திற்கு தற்பொழுது சில சிவப்பு வெளிச்சத்தைக் காட்டி வருகின்றனர். ஆகவே நாட்டின் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பெரும் சவால்களுக்குமுகம் கொடுக்க நேரிடும்.

சமாதானம் சம்பந்தமாக தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு பிழையான கருத்துக்களை வெளியிட்டமையால் அநேக பிரச்சினைகள் மத்தியில் அரசாங்கம் தற்பொழுது சிக்கித் தவிக்கிறது. அரசாங்கம் பதவி ஏற்பதற்கு முன்னதாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை அதிகமாக விமர்சனம் செய்தமையால் அந்த விமர்சனங்கள் தற்பொழுது அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்திருக்கின்றது. மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமானால் அரசாங்கம் பின் நோக்கிச் செல்ல முடியாது. இது அரசாங்கத்திற்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள பெரும் சவாலாகும். விடுதலைப்புலிகள் வடகிழக்கில் தற்பொழுது நடத்தி வரும் ஆட்சியை அரசாங்கத்திற்கு நிராகரிக்க முடியாது. கருணா சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தூக்கிக்கொண்டு அரசாங்கம் விடுதலைப்புலிகளை மட்டம் தட்ட முயல இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. கருணா பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து விடுதலைப்புலிகளை பலவீனப் படுத்தி பிறகு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு இப்பொழுது அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தற்போது கருணாவைப் பற்றி அரசாங்கத்திற்கு எதுவும் தெரியாதென்று கூறிவரு கின்றது. அரசாங்கத்தின் வழிகாட்டல் இல்லாமல் கருணாவிற்குத் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது. ஆகவே கருணாவிற்கு அரசாங்கம் திரை மறைவில் உதவிகளைச் செய்துவருகின்றதென்பதை மறுக்க முடியாது.

இப்பொழுது அரசாங்கம் தொடர்ந்து செயற்பட வேண்டுமானால் சமாதானப் பேச்சுக்களை விட தனது பெரும்பான்மைப்பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய கட்டத்தில் அரசாங்கம் உள்ளது. ஆகவே சமாதானப் பேச்சுவார்த்தைகளை விட அரசாங்கம் தப்பித்து பிழைத்துக் கொள்வதற்கு சிறுபான்மைக் கட்சியினர்களின் உதவிகள் தேவைப்படுகின்றமையால் எவ்வளவு விலை கொடுத்தாவது அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போதைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.கடந்த அரசாங்கத் தலைமைப்பீடம் சமாதானம் என்ற ஒரே நோக்குடன் செயற்பட்டமையால் நாட்டின் பொருளாதார பிரச்சினைகளையும் அன்றாட மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் பற்றிச் சிந்திக்கத் தவறி விட்டது. முதலில் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின் அபிவிருத்தியை மேற்கொள்வதென்பது ஐக்கிய தேசிய முன்னணியின் சித்தாந்தமாகும். தேசிய பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் சமாதானத்தை முன்னெடுத்துச் சென்றபடியால் இரண்டு வருடகாலம் நாட்டில் பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் இருந்தது. சர்வதேச ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. நாட்டை பொருளாதார முன்னேற்றத்திற்கு கொண்டு வருவதற்கான அடித்தளத்தை கட்டியெழுப்ப முடிந்தது.

தற்போதைய அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சந்தேகங்கள் கிளம்பியுள்ள படியால் எதிர் காலத்தில் சமாதான நடவடிக்கையானது ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது. அப்படி சந்தேகங்கள் ஏற்படும் பொழுது சமாதான, நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிகக்கடினமான விடயமாகும். தற்போதைய புதிய அரசாங்கம் நேர் வழியில் செல்வதே பிரதான கொள்கை எனப் பிரகடனம் செய்துள்ள படியால் எல்லா விடயங்களையும் தெளிவாக ஆராய்ந்த பின்பே அதை அமுற்படுத்த வேண்டுமென்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்குமானால் அரசும் விடுதலைப்புலிகளும் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் பொழுது இருசாராரும் ஒருமித்து வர முடியாத நிலை ஏற்படும் விடுதலைப்புலி களும் ரணில் அரசும் ஒருவரை ஒருவர் நம்பிய படியால் சமாதான நடவடிக்கை இரண்டு வருட காலமாக முன்னெடுக்கப்பட்டது. ஆனபடியால் எல்லா விடயங்களையும் இந்த அரசு ஒரே குறிக்கோளுடன் கடைப்பிடித்துச் செயற்படுவதற்கு முயற்சி செய்தால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடியும். சமஷ்டி ஆட்சிமுறையை கைவிடுவது இப்போதைய அரசின் நிலைப்பாடாக உள்ளது. இங்கு விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள சமஷ்டி ஆட்சி முறை நிராகரிக்கப்படுமென்ற நோக்கை இலக்காகக் கொண்டு தற்போது விடுதலைப்புலிகள் போரைப்பற்றிய சமிக்ஞைகளை அடிக்கடி முன்வைத்து அரசுக்கு ஞாபகப்படுத்திய வண்ணமுள்ளனர். ஆகவே சமாதானத்தின் மூலம் இனப்பிரச் சினக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தற்பொழுது முன்வருவது மிக அவசியமாகும். அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் சில அரசியல் கட்சிகளும் இராணுவத்தின் சில குழுக்களும் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு முயற்சி செய்தால் இந்த நாடு பெரும் பேரழிவை எதிர் நோக்க இடமுண்டு. அது மட்டுமல்ல சமாதானப் பேச்சுக்களும் சிதறிப்போகும். கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு புதிய இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட சமீபத்தில் விட்ட அறிக்கை காலத்திற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.ஆகவே நாங்கள் யுத்தத்தைப் பற்றிப் பயப்படுவதற்கு எந்த அவசியமும் கிடையாது. இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டாவிட்டால் இன்னும் இரண்டு வருடங்கள் இப்பிரச்சினை நீடித்த வண்ணம் இருக்கும். அடுத்த தேர்தல் வரை இப்பிரச்சினை நீடிக்குமானால் எதிர்காலத்தில் இந் நாட்டு மக்கள் அனைவரும் பெரும் பிரச்சி னைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் சனாதிபதியின் சகல அதிகாரங்களும் இந்த அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே தற்பொழுது சகல அதிகாரங்களையும் கொண்ட அரசாக சந்திரிகா திகழ்கின்றார். எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எந்த முட்டுக்கட்டையும் ஏற்படாது. ஆகவே இந்த இனப் பிரச்சினைக்கு சந்திரிகா நல்ல தீர்வை முன்வைத்து செயற்படுத்துவாரானால் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பு இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கும்

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் சிறந்த தீர்வைச் செயற்படுத்தி நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்தினால் இது பலமிக்க அரசாங்கமாக மாறுவ துடன் இந்த அரசாங்கத்தை வீழ்த்துவது மிகக் கடினமானதொரு விடயமாகும். ஜே.வி.பி.யின் கொள்கைகளினால் இப்பேச்சு வார்த்தையை முன்னெடுப்பது தற்பொழுது மிகச் சிக்கலான விடயமாக உள்ளது. ஆனால் தற்போதைய அரசு ஜே.வி.பி.யின் கொள்கைக்குப் பயந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தயங்கினால் நாட்டில் ஏற்படும்அழிவுகளுக்கு அரசாங்கம் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டிவரும்.

இந்த தலைவர்களுக்கு மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எண்ணம் இருந்தால் இந்த அரசாங்கம் கடந்தவை களை மறந்து தனது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். கடந்த அரசாங்கம் இடைநிறுத்திய இடத்தி லிருந்து பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப் பது மிக அவசியமாகும். இதைவிட வேறுமார்க்கம் தற்போதைய அரசுக்குக் கிடையாது. உலக நாடுகளின் அனுசரணையைப் பெற்று கடந்த அரசாங்கம் எப்படி பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் சென்றதோ அதே மார்க் கத்தை இந்த அரசாங்கமும் பின்பற்றுவது மிக அவசியம். இப்பொழுது விடுதலைப் புலிகளின் ஆட்சி முறையை தென்னிலங்கை அரசு இணைத்துக் கொள்வது சாலச்சிறந்தது. அப்படி இணைத்தால் அது சமஷ்டி ஆட்சி முறைக்கு வழி வகுக்கும். இதைத்தவிர்த்து அரசாங்கம் மாற்று வழிகளைக் கடைப்பிடிக்குமானால் இதனால் ஏற்படும் அழிவுகளுக்கும் எதிர காலப் பின் விளைவுகளுக்கும் தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டு. இவைகள் யாவும் சிந்தித்துச் செயற்பட்டால் நாட்டிற்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு. இல்லை யேல் பேரழிவுதான் மிஞ்சும்.

- கொழும்பில் குண்டு வெடிப்புத் தொடர்பாக -

# பொலிசார் வெளியிடும் ஊகங்களால் தமிழ் பெண்களுக்கு பெரும் இன்னல் ஏற்படும்!

(கொழும்பு)

**தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக பொலிசார் வெளியிட்டுவரும் ஊகத் தகவல்கள் தமிழ்ப் பெண்களுக்குப் பெரும் இன்னல்களை விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பெண்கள் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று கண்டனம் தெரிவிக்கிறது.**

அண்மையில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய பெண் குண்டை மார்புடன் இணைத்து வைத்திருந்தார் என பொலிசார் கூறுகின்றனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட பெண்ணின் உடலையும் பரிசோதிக்கும் நிபுணர்களின் அறிக்கைகள் இன்னும் வெளிவராத நிலையில் பொலிசாரின் இத்தகைய ஊகங்கள் பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் தமிழ்ப் பெண்களின் நிலையைச் சங்கடத்திற்கு உள்ளாக்கும் என்று அப்பெண்கள் நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

இத்தகைய கற்பனைத் தகவல்களைப் பயன்படுத்தி தமிழ்ப்பெண்களைத் தவறான பரிசோதனைக்கு உட்படுத்துவது சர்வதேச விதிகளுக்கு முரணானது என அந் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான வழக்குகளை விரைந்து விசாரிக்க ஆலோசனை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு விசாரணையை துரிதப்படுத்துமாறு அரசாங்க சட்டத்தரணிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடக்கப்பட்ட வழக்குகளில் அனேகமானவை பூர்த்தியடைந்து விட்டதாகவும், 25 வழக்குகள் மாத்திரமே விசாரிக்கப்படுவதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது.

போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் சந்தேக நபர்களுக்கெதிரான குற்றப்பத்திரிகைகள் வாபஸ் பெறப்பட்டதாகத் திணைக்களத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான வழக்குகளை விசாரிப்பதற்கென வெலிக்கடைச் சிறைச்சாலையில் விசேட மேல் நீதிமன்றத்தை அமைத்த போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட வழக்குகளே இருப்பதனால் அதன் செயற்பாடுகளைக் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றியதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# துண்டுப் பிரசுரம் விநியோகித்தோருக்கு அபராதம் செலுத்த உத்தரவு

(கொழும்பு)

கடந்த மாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பு நடந்த தினத்தன்று ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ஒருவரது இலக்கத்தையும், யானைச்சின்னத்தையும் தாங்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த நான்கு பேர் தலா 250 ரூபா தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கனேகொட, ராஜசிங்க மகாவித்தியாலய வாக்குச் சாவடி எல்லைக்குள் பிரசார துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனை விசாரித்த அத்தனகல நீதவான் இத் தீர்ப்பை அறிவித்துள்ளார்.

# நாட்டில் அதர்மராஜ்யம் நடக்கிறது நிரஞ்சன் விஜேரத்ன கண்டனம்

(கொழும்பு)

"இன்று எமது நாட்டில் தர்ம ராஜ்யத்திற்குப் பதிலாக அதர்மராஜ்யம் நடைபெறுகின்றது." இவ்வாறு கண்டனம் தெரிவிக்கின்றார் கண்டி தலதா மாளிகை தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன. இளம்பெண்கள் உடுத்தும் உடைகள் எமது கலாசாரத்தை சீரழிப்பதுடன், பார்ப்பதற்கு மிகவும் கேவலமாகவும் உள்ளது. எனவே பௌத்த விகாரைகளுக்கு வரும் பௌத்த இளம் யுவதிகளையும், திருமணமான பெண்களையும் சேலை உடுத்திக் கொண்டு பௌத்த தலங்களுக்கு செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். பாராளுமன்றத்திற்குபௌத்த பிக்குகள் சென்றவுடன் அவர்களை அடித்துத் துன்புறுத்தி வருகின்றனர். இவைகளை எல்லாம் அரசு பார்த்துக் கொண்டு மௌனமாக உள்ளது.

பௌத்த விகாரையில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்படுவதுடன் விலை மதிக்க முடியாத பௌத்த சிலைகள் விகாரையில் களவாடப்படுகின்றன. இவ்வாறான செயல்கள் எமது நாட்டுக் கலாச்சாரத்தை மிகவும் பாதித்துள்ளது. அத்துடன் வெளிநாட்டவர்கள் இலங்கைப் பௌத்தர்களைப் பற்றி மிகவும் கேவலமாகப் பேசி வருகின்றனர் என கண்டி தலதாமாளிகை திய வதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன கவலை தெரிவித்துள்ளார்.

# அரசுடன் இணைவது குறித்த தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் தொண்டமானிடம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பீடம் அரசாங்கத்துடன் இணைவது குறித்துத் தீர்மானம் எடுக்கும்முழுஅதிகாரத்தையும் கட்சித்தலைவர் ஆறுமுகம் தொண்டமானிடம் ஒப்படைத்துள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இ.தொ. காங்கிரஸின் சிரேஸ்ட உறுப்பினர் செல்லச்சாமி கருத்துத் தெரிவிக்கையில் தலைவரின் தீர்மானம் பற்றி ஆராய்வதற்கு இன்னும் சில தினங்களுக்குள் தாம் ஒன்று கூடவுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

# விடுதலைப்புலிகள் தற்சமயம் இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப்புலிகள் தற்சமயம் இரட்டைக் கொள்கை முறையைக் கடைப்பிடித்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர் கொழும்பில் குண்டுத்தாக்குதலை நடத்தும் அவர்கள் மறுபுறத்தில் சமாதானம் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் பேசுவதாக விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தமது அரசாங்கம் எதுவும் செய்யவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி கூறிவந்த போதும், மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளாமல், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்ததாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் தாம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அவர்கள் நடத்திய குண்டுத்தாக்குதலை கண்டிக்காத அரச சார்பற்ற அமைப்புக்களையும் கண்டித்தே ஒட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வின் பேச்சுக்களின இடையிலேயே இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுமென்ற விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததாக ஊடக அமைச்சர் மங்கள சமரவீர அந்த ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

## அலவி நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முஸ்லிம் விவகாரங்களுக்கான தனது ஆலோசகராக மேல்மாகாண ஆளுநர் அஸீத் அலவி மௌலானாவை நியமித்துள்ளார்.


31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ்
05 - 07 - 1932

மண்நெகிழ்
15 - 06 - 2004



அமரர்

திரு.சின்னத்தம்பி பொன்னையா

சிவன் கோவிலடி,மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.

அன்புக்கும் அரவணைப்புக்கும் ஆசானாய்
உரை நடையில் ஒழுக்க சீலராய்
வஞ்சகம் இல்லா நேர்மையில் நேரியனாய் இருந்த
எங்கள் பாசத் தெய்வமே-ஐயா

நீங்கள் பேரன் பேத்திகளையும் கண்டீர்கள் அகமகிழ்ந்தோம்
பூட்டி பூட்டர்களையும் காணவேண்டும் - காண்பீர்கள்
என்றிருந்தோம் நப்பாசையில்- ஆனால்
சற்றும் எதிர்பாராமல் உங்கள் இதயநாடி
துடிப்பற்றுப்போனதுவே...
ஐயா இனிவரும் உங்கள் பூட்டன் பூட்டிகள்
தாத்தா எங்கே? என்றால்...
விடைக்காக உங்கள் பாதம் கண்டால் அஞ்சலிப்போம்
ஐயா ஆண்டுகள் பல கடந்தாலும் என்றும் எம்
இதயக் கோயிலில் துடிப்பு உள்ளவரை
நீங்கள் தான் தெய்வமாக...

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்...*

*தகவல்:-*
குடும்பத்தினர்.

(4772)



புது முறிப்பு கற்பக விநாயகர் ஆலயம்

ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் 17.7.2004

வழமை போல் தீர்த்தமாடுவதற்கும் பிதிர் கடன் செய்வதற்கும் 17.7.2004 காலை 8.00 மணிக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய பரிபாலன சபை

(9753)



மணமகள் தேவை



*லண்டனில் வசிக்கும் 29 வயதுடைய R.C ரோமன் கத்தோலிக்க மதத்தைச்சேர்ந்த நல்ல நிறமுடைய சராசரி உயரமான (B.A, CONMIC,CIMA) பட்டதாரி வாலிபருக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏதோ ஒன்றில் நிரந்தர குடியுரிமையுடன் பண்புள்ள படித்த மணமகள் தேவை.*

*மணமகன் பெற்றோர் முகவரி:-*
நிஷா தொலைத் தொடர்பகம்,
கண்டிவீதி-மிருசுவில்
தொலைபேசி இலக்கம்

077777-5503
60221-2378

*மணமகன் - லண்டனில் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்*

07818651154
07751467439

(கி-10017)

# நதிநீர் பகிர்வு ஒப்பந்தங்கள் திடீர் ரத்து பஞ்சாப் மீது அயல் மாநிலங்கள் சீற்றம்

## மத்திய அரசிற்கு முதலமைச்சர்கள் நிர்ப்பந்தம்

(புதுடில்லி)

**அயல் மாநிலங்களுடன் 'நதிநீர் பகிர்வு' ஒப்பந்தங்களை ரத்துச் செய்துள்ள பஞ்சாப் அரசின் முடிவை எதிர்த்து மத்தியரசு இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான் மாநில முதலமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**



பஞ்சாப் அரசைக் கண்டித்து பாராளுமன்றத்தில் குரலெலுப்பிய பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற கட்டடத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றார்கள்.

பஞ்சாப், ஹிரியானா, ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சர்விஸ், சியாஸ் நதி நீரினைப் பகிர்ந்து கொள்வதென்று 1981 இல் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விட்டதாக பஞ்சாப் முதலமைச்சர் அமீர்சேந்சிங் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ஏனைய மூன்று மாநிலங்களும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து பிரதமர் மன்மோகன் சிங்கைத் தனித்தனியே நேற்று மாநில முதலமைச்சர்கள் சந்தித்துள்ளனர்.

ஆனால் பஞ்சாப் முதலமைச்சர் ஒன்பது இலட்ச ஏக்கர் நிலப்பரப்பையும் ஆறு இலட்சம் மக்களையும் தவிர்க்க விட முடியாது என்றும் பஞ்சாப் ஆளுநர் நதிநீர் பகிர்வினை ரத்துச் செய்வதற்கு ஒப்புதலளித்துள்ளதால் அது சட்டமாக மாறிவிட்டது இனி மாற்ற முடியாது என்றும் கூறியுள்ளார்.




கைக்குண்டு வெடிப்பை அடுத்து சிறிநகர் வீதியில் ரோந்து செல்லும் பொலிசார்

காஷ்மீர் துணை முதல்வர் இக்கைக்குண்டுத் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.இத்தாக்குதல் இஸ்லாமிய தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது

# பாதுகாப்புடன் யாத்திரை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் அமர்நாத் யாத்திரிகள் 1,381 பேர் மிகுந்த பாதுகாப்புடன் புறப்பட்டுள்ளனர். யாத்திரையை ஜம்மு காஷ்மீர் துணை முதலமைச்சர் வெங்கட்ராம் சர்மா நேற்று தொடக்கி வைத்துள்ளார்.

யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் 64 பாதுகாப்புபடையணிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### -அருணாச்சலப் பிரதேச-

# சட்டப்பேரவையைக் கலைக்கும் பரிந்துரைக்கு காங்கிரஸ் எதிர்ப்பு

(புதுடில்லி)

அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் சட்டப் பேரவையைக் கலைப்பதற்கு ஆளுநர் பரிந்துரைப்பதை எதிர்த்து மாநிலம் தழுவிய கதவடைப்பு போராட்டத்தை காங்கிரஸ் கட்சி நேற்று நடத்தியுள்ளது.ஆளுநர் மாநில சட்டப் பேரவையை கலைத்து பரிந்துரைத்தமைக்கும் இதனால் ஆளுநரை பதவி நீக்க வேண்டும் என்றும் முழு கதவடைப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது.

இதே வேளை நேற்று முன்தினமும் காங்கிரஸ் மாநிலம் தழுவிய முழு கதவடைப்பு போராட்டம் நடத்தியுள்ளது.

# நான்கு மாநில ஆளுநர்கள் பதவி நீக்கம் மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்று அழைப்பாணை

(புதுடில்லி)

குஜராத், ஹியானை, உத்தரப் பிரதேசம், கோவா ஆகிய மாநிலங்களின் ஆளுநர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் மத்தியரசிற்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

நான்கு மாநில ஆளுநர்களையும் அண்மையில் மத்தியரசு பதவி நீக்கம் செய்திருந்தது. இதனை எதிர்த்து பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பி.பி.சிங்வல் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நேற்று மூன்று நீதிபதிகள் குழு விசாரணை செய்தது. இதனையடுத்து மத்தியரசிற்கு உச்ச நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

# ஆளுநர்கள் பதவி நீக்கம் கூட்டாட்சியைப் பலவீனமாக்கும்

### -அத்வானி தெரிவிப்பு-

"நான்கு மாநில ஆளுநர்கள் நீக்கப்பட்டது கூட்டாட்சி அமைப்பையே பலவீனமாக்கும். இம்முடிவை மத்திய அரசு திறந்த மனதுடன் மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்று நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் எல்.கே அத்வானி கூறியுள்ளார்.

ஆளுநர்கள் நீக்கம் பற்றி மக்களவையில் திங்கட்கிழமை அத்வானி பேசியதாவது;சித்தாந்த அடிப்படையில் ஆளுநர்களை நீக்கியது நாடாளுமன்ற அமைப்புக்கே எதிரானது; இது குறித்து பாஜக ஆளும் மாநில முதல்வர்களிடம் விவாதிக்கப்படவில்லை. அவர்களுக்கு தகவல் மட்டுமே தெரிவிக்கப்பட்டது. ஆளுநர்களை ஐந்தாண்டுக்கான பதவியில் நீடிக்கச் செய்ய வேண்டும் என்று சர்க்காரிய கமிஷன் அளித்துள்ள பரிந்துரையை உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநில முதல் வர்களை கலந்தலோசித்த பின்னரே ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும் அவர்கள் மீது ஆளுநர்களை திணிக்கக் கூடாது. ஆளுநர்களை நியமனம் செய்யும் முறையும், நீக்கும் முறையும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று அரசியல் அமைப்பை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட வெங்கடாசலையா கமிசன் கூறியுள்ளது. ஆளுநர்கள் நியமனம் குறித்து மாநில முதல்வர்களுடன் ஆலோசிக்க வேண்டுமென்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. மாறுபட்ட சித்தாந்தம் உடையவர்கள என்பதால் நான்கு மாநில ஆளுநர்கள் மாற்றப் பட்டதாக உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். இது தொடர்ந்தால் ஒவ்வொரு முறையும் மாறுபட்ட சித்தாந்தங்கள் கொண்ட அரசுகள் பதவி ஏற்கும் போது பிரச்சினை ஏற்படும் என்று கூறியுள்ளார்.

# கிழக்கு,வடகிழக்கு மாநிலங்களில் வெள்ள நிலைமை மோசமடைகின்றது!

### இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின், கிழக்கு, வடகிழக்கு மாநிலங்களில் வெள்ள நிலைமை மோசமடைந்து வருகின்றது.இந்த மாநிலங்களில் வெள்ளத்தினால் இதுவரை 75 பேர் உயிரிழந்துள்ளனர்.

அசாம் மாநிலத்தில் பிரமபுத்திரா நதியில் தண்ணீர் அளவு மேலும் அதிகரித்து வருகின்றது. இதனால் தலைநகர் ருவாகாந்தி வெள்ளத்தினால் மூழ்கிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 23 மாவட்டங்களில் சுமார் 50 லட்சம் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் பீகாரிலும் வெள்ள நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இம்மாநிலத்தில் பெரும் பாலான மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

அருணாச்சலப் பிரதேசத்தில் தொடர்ந்து மழை பொழிவ தால், வெள்ள நிலைமை மோச மடைந்து வருகின்றது.

மேற்குவங்கமாநிலத்தில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுவருவதாகக் கூறப்படுகின்றது.

13 ஆவது நினைவு அஞ்சலி

பிறப்பு 1968 - 07 - 12



இறப்பு 1991 - 07 - 15

கப்டன் மனோ

கோணலிங்கம் ஸ்ரீதரன்
(குச்சவெளி, திருமலை)

ஈழமண் மீட்பிற்காய்
அண்ணன் வழியில்
வீறுநடை போட்டு
விடுதலைக்கு வித்தான-உன்
நினைவுகளுடன்...

தகவல்:-
குடும்பத்தினர்.

(4820)

# இந்தியாவுடன் உறவை மேம்படுத்த ஆர்மிரேஜ் புதுடில்லி வருகை

### -உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு

(புதுடில்லி)

இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்தும் முகமாக அமெரிக்க வெளியுறவுத்துறைத் துணை அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜ் நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளார்.

இவர் புதிய மன்மோகன்சிங் அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவே இந்தியாவுக்கு வந்துள்ளார். நேற்று தேசிய பாதுகாப்பாலோசகர் ஜே.என்.டிக்சிற்றுடனும் வெளியுறவுத் துறைச் செயலருடனும் பேச்சு நடத்தியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்குடனும் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்குடனும் பேச்சுக்கள் நடத்திய பின்னர், அவர் பாகிஸ்தான் பயணமாக வுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் அமெரிக்கத் துருப்புக்களுக்குப் பதிலாக தெற்காசிய நாடுகளின் துருப்புக்களை அனுப்பக் கோருவது அவரது ஆலோசனைப்பட்டடியலில் முதன்மை பெற்றுள்ளது.




சிம்லாவில் இரண்டு கல்லூரி மாணவிகள் வீதியை கடக்க முயன்றபோது விபத்தில் சிக்கிப் பலியானார்கள். அதனைக் கண்டித்து மாணவிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.



ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்காக சிறிலங்கா வருகை தந்த பாகிஸ்தான் அணி வீரர்கள் விமான நிலையத்தில் வரவேற்கப்படுகின்றனர்.

# சொந்த நாட்டில் தோற்றதற்காக இந்தியாவைப் பழிதீர்க்கும் எண்ணமில்லை

## இன்சமாம் உல் ஹக்



பாகிஸ்தானில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தோல்வி அடைந்ததற்காக ஆசியக் கோப்பையில் இந்தியாவைப் பழிவாங்கும் எண்ணமில்லை என்றார் அந்நாட்டு அணித் தலைவர் இன்சமாம் உல் ஹக். "பழிவாங்குதல் எனும் வார்த்தையை நாங்கள் பயன்படுத்துவதில்லை. இங்கு சிறப்பாக ஆடவே வந்திருக்கிறோம். சிறப்பாக ஆடி வெற்றி பெறுவோம்" என நிருபர்களிடம் கூறினார். எனினும் கடுமையான போட்டிக்குத் தயாராக இருக்குமாறு இந்தியாவை எச்சரித்துள்ளார் அவர். ஆசியக் கோப்பைப் போட்டியில் பங்கேற்பதற்காக கொழும்பு போய்ச் சேர்ந்துள்ளது பாகிஸ்தான் அணித் தலைவர் அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆசியக் கோப்பைப் போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஐக்கிய அரபு எமிரேட், ஹெங்கொங் ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. வரும் 16ஆம் திகதி தொடங்கும் ஆட்டம் ஒகஸ்ட் 1ஆம் திகதி வரை நடைபெறுகிறது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை, அனைவரையும் கவரும் வீரராக சொஹைப் அக்தர் விளங்குகிறார். கடந்த 5ஆம் திகதி பயிற்சி முகாமில் இணைந்து கொண்ட அக்தர், நிருபர்களிடம் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. இதற்கு அணிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடே காரணம். அணித் தலைவர் தவிர பிற வீரர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசக்கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது "நாஙகள் ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறோம். வேறு எதிலும் அல்ல" என்கிறார் அணி மேலாளர் ரஷீத். சனிக்கிழமை தங்களது முதலாவது ஆட்டத்தில் வங்கதேசத்தை எதிர்கொள்கிறது பாகிஸ்தான்.



# முரளிக்கு ஏற்ற வகையில் ஆடுகளங்கள்; சாதனை எட்டப்படாதது கவலையில்லை!

## நியாயம் கற்பிக்கிறார் வோர்ன்

முரளியின் உலக சாதனையை முறியடிக்க முடியாது போனமை தனக்கு கவலை தரவில்லை உலகசாதனையை சமப்படுத்தியதே தனக்கு பெருமையாகவுள்ளது. என சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

முரளியைப் பொறுத்தமட்டில் விக்கெட்டுக்களைக் குவிப்பது சாதாரண விடயம் ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் விக்கெட்டுக்களை இலகுவாகக் குவிப்பது என்பது சாதாரண இலகுவான விடயம் அல்ல.

முரளிக்கு ஏற்ற வகை யிலேயே ஆடு களங்கள் சிறிலங்காவில் தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் எனக்கு அப்படியல்ல நான் வெற்றிக்காக பாடுபடுகிறேன்.

எனவே முரளியைப் பொறுத்தமட்டில்அவர் விக்கெட்டுக்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் குறிப்பாக சிறிலங்கா ஆடுகளங்களிலேயே அதிகமாக விளையாடுகின்றார்.

எனவே இந்த ஆடுகளங்கள் முரளிக்கு ஏற்றவகையிலேயே செய்யப்படுகின்றன. இதனால் முரளி விக்கெட்டுக்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான ஆடுகளமாக இருக்கலாம் அதில் தான் சிரமப்பட்டே விக்கெட்டுக்களை பெறவேண்டியிருப்பதாகவும் ஷேன்வோர்ன் தெரிவித்துள்ளார். முரளிதரன் அவுஸ்திரேலியா வராமைக்கு அவர் பந்து வீசும்போது அவுஸ்திரேலியர் அவருக்கு எதிராகவும், தனக்கு ஆதரவாகவும் கோஷங்களை எழுப்புவர். இது அவரை நெருக்கடிக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதற்கே அவர் அவுஸ். பயணத்தை இரத்துச் செய்தார் எனவும் வோர்ன் குறிப்பிட்டார்.

# ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் முரளி விளையாடுவார்

சிறிலங்காவில் நாளை ஆரம்பமாகவுள்ள ஆறு நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் ஒரு நாள் போட்டித் தொடருக்கான சிறிலங்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முத்தையா முரளிதரன் இணைக்கப்பட்டுள்ளார். அத்துடன் இங்கிலாந்து கவுண்டி அணிக்கெதிரான போட்டிகளில் பங்கேற்கும் அணியில் இடம்பெற்ற திலின கண்டம்பி, அவிஷ்க குணவர்தன, சமன் ஜயந்த ஆகியோரும் இணைக்கப்பட்டுள்ளனர். அணிவிபரம்- மாவன் அத்தப்பத்து (தலைவர்) சனத் ஜெயசூரிய, ஜெய வர்த்தன, வாஸ், முரளிதரன், சொய்சா, சங்கக்காரா, தில்ஷான், மாலிங்க, பர்வீஸ்மஹ்ரூப், உபுள் சந்தன கண்டம்பி, ஜயந்த ஆகியோர் அணியில் இடம் பெறுகின்றனர்.

# ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தால் பாக். வீரர்களுக்கு ஊதியத்தில் வெட்டு


பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தடைவிதித்துள்ளது. பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்.-ஹக்கிற்கும் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை ஊடகங்களுக்கு மாறி மாறித் தெரிவித்ததால் அணியின் நற்பெயர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அணி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இத்தடையை மீறி ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவோர் தமது வருமானத்தில் ஒருதொகையை தண்டப்பணமாக செலுத்த வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முகாமையாளர், பயிற்று விப்பாளர் அல்லது அணித் தலைவரின் சம்மதத்துடன் வீரர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உடல், மனரீதியாக இந்திய வீரர்கள் தயார் பாக். வெற்றி தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## துணைத் தலைவர் ராவிட்



கடந்த கால வெற்றியை நினைத்து களிப்புறாமல், ஒவ்வொரு ஆட்டத்தையும் புதிய ஆட்டமாக விளையாடும் மனபக்குவத்தை வீரர்கள் பெற்றுள்ளனர் என்று இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக சென்னையிலிருந்து கொழும்புக்கு இந்திய கிரிக்கெட் அணி செவ்வாய்க்கிழமை புறப்பட்டதுஅதற்குமுன்பாக நடைபெற்றபத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது ராவிட் இவ்வாறு தெரிவித்தார் . பாகிஸ்தான் சுற்றுப் பயண வெற்றியை நினைத்து அணி மகிழ்ச்சியில் மட்டும் திளைக்கவில்லை. அதே நேரத்தில் அவ்வெற்றி, அணியின் தன்னம் பிக்கைக்குப் பல மூட்டுவதாக உள்ளது. ஒவ்வொரு ஆட்டத்தையும், அதில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடனே எதிர்கொள் கிறோம் கடந்த ஒரு மாதமாக பெங்களூர் மற்றும் சென்னையில் நடைபெற்ற பயிற்சி, உடல்தகுதி முகாம்கள் உடல் மற்றும் மன ரீதியாக வீரர்களை மேம்படுத்தியுள்ளது. பயிற்சி முகாம்களின்போது முன்னாள் வீரர்கள் கபில்தேவ், ஜே.ஃப்ரி பாய்காட் ஆகியோர் வீரர்களுடன் கலந்து பேசியது மிகுந்த பலனளிக்கும் என்றார் ராவிட்.



சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-0 என்ற ரீதியில் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணியினர் வெற்றிக் கிண்ணத்துடன் காணப்படுகின்றனர்.

# அதிவேக ஓட்ட தம்பதிகளின் ஒலிம்பிக் கனவு நிராசையானது

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிகாண் போட்டிகளிலமுன்னணி மெய்வல்லுநர் வீர,வீராங்கனைகளான டிம் மொண்டி கோமரி, மேரியன் ஜோன்ஸ் ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த திங்களன்று நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளில் 100மீற்றர் ஓட்ட வீரர் டிம் மொண்டி கோமரி ஏழாவது இடத்தை பெற்றதால் அவரது ஒலிம்பிக் கனவு பறிபோனது.

100மீற்றர் ஓட்ட தூரத்தினை அவர் 10.13 என்ற செக்கன்களிலேயே கடந்தார். மேரியன் ஜோன்சின் கணவர் டிம்மொண்டி கோமரியின் இந்த தோல்வியை அடுத்து ஒலிம்பிக் கனவு நிராசையாகியுள்ளது.

இதேவேளை பெண்களுக்கான 100மீற்றர் தகுதிகாண் போட்டியில் 27வயதான லதாசா கொலண்டர் முதலிடத்தைப் பெற்று ஒலிம்பிக்போட்டிக்கான தகுதியைப் பெற்றார். இவர் 10.97 என்ற செக்கனில் இலக்கை அடைந்தார்.

### ஒலிம்பிக் போட்டிக்கான சிறிலங்கா குழாமில் சுசந்திகா உட்பட 11 வீர, வீராங்கனைகள்

ஆகஸ்ட் 13ஆம் திகதி கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸ் நகரில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் சிறிலங்கா குழாம் உத்தியோக பூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்கா உட்பட பதினொரு வீர வீராங்கனைகள் உள்ளடக்கப் பட்டுள்ளனர்.ஏனையோர் ரொகான், சுகத், தர்சா, பிரசன்ன, ஐ.கே.குரே, ரங்கவிமலவன்ச, ஆர்.புஸ்பகுமார, பி.ஜ. ராமநாயக்க, பிரான்சிஸ், மேனகா டீசில்வா.




# அடம்ஸ்-ரஸ்தம் ஆட்டம் சமநிலையில்

திரிபோலியில் நடைபெற்றுவரும் உலக 'செஸ்' சாம்பியன் பட்டப் போட்டியின் ஆறாவது சுற்றில் இங்கிலாந்தின் அடம்ஸ்-உஸ்பெகிஸ்தானின் ரஸ்தம் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. இந்த ஆட்டம் மிகவும் பரபரப்பாக அமைந்திருந்தது. தோல்வியிலிருந்து தப்பிப்பிழைத்த அடம்ஸ், ஒருவாறாகபோட்டியைசமன்செய்தார். இதன் மூலம் இருவரும் 3-3 என்ற புள்ளி கணக்கில் உள்ளனர். இந்தத் தொடரின் வினோத அம்சமாக, வெள்ளை நிற காய்களை வைத்து விளையாடுபவருக்கு வெற்றி கிடைத்து வருகிறது. இதைத் தொடர்ந்து குறுகிய நேரம் மட்டுமே நடத்தப்படும் ஆட்டங்களை ஆடவுள்ளனர். இதில் வெற்றி பெறுபவருக்குப் பட்டம் கிடைக்கும்.

# சாதனைகளின் நாயகன் சச்சின் மேலும் சாதனை புரியக்கூடியவர்


## கவாஸ்கர்

இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இதுவரை பல சாதனைகளை முறியடித்திருந்தாலும் இன்னும் பல சாதனைகளைப் புரியக் கூடிய நிலையிலுள்ளார் என முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், அணித் தலைவருமான சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

பல துடுப்பாட்ட வீரர்கள் 28 முதல் 33, 34 வயது வரையான காலப் பகுதியில் உச்ச நிலைக்குச் சென்று ஓய்வு எடுத்திருக்கும் நிலையில் சச்சின் ஓய்வு எடுக்காமல் போட்டிகளில் பங்கேற்கும் உடற்தகுதியையும், மனவலிமையையும் பெற்றுள்ளதாக தான் கருதுவதாகவும், டெஸ்ட் போட்டிகளில் தனது 35ஆவது சதத்தைப் பெறும்போது அது முச்சதமாகவோ அதற்கு மேலாகவோ இருக்கும். மிகவும் இளம் வயதில் துடுப்பாட்டத்தில் இணைந்த அவர் எதிர்ப்புகளுக்கு சாதகமாக முகம் கொடுத்து தற்போதைய அணிக்குப் பலம் சேர்ப்பார்.

தற்போது அணி நிகரற்ற அணியாக இருக்கிறது. அண்மைய போட்டிகளிலும் அணி சிறந்து விளங்கியது இவ்வாறு கவஸ்கர் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகு சனங்கள் ஒன்று திரண்டு, ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சிகொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான், எமக்கு வெற்றி நிச்சயம்.

தமிழீழதேசியத்தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை, கிளிநொச்சி. 15-07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com


## அடித்தளத்தைத் தகர்த்தல்!

சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும், அரசியல்தீர்விலும் தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கை பெருமளவில் சிதைந்து போய் விட்டது. மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதானதொரு உணர்வே மக்கள் மனங்களில் எழுவதாய் உள்ளது. இது மக்களின் அதீதமானதொரு கற்பனையல்ல. நடப்புகள் நிகழ்வுகள் இதனையே வெளிப்படுத்துவனவாய் உள்ளன.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடந்த நோர்வேத் தூதுவருடனான சந்திப்பில் விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்த நிறுத்த உடன்பாடு உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தே வலியுறுத்தியுள்ளனர். அரசின் நடவடிக்கைகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானவை எனவும், இந்நிலை தொடர்ந்தால் யுத்தநிறுத்தமே கேள்விக்குள்ளாகிவிடும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது மாத்திரமல்ல இத்தகையதொரு சூழ் நிலை நிலவுகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுதல் என்பது சாத்தியமற்றதொன்று எனவும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். அதாவது அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது விட்டால் சமாதானப் பேச்சிற்கான வாய்ப்புக்களே அற்றதாகிவிடும் என்பதைப் புலிகள் உணர்த்த முற்பட்டுள்ளனர்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் / நடாத்தப்படும் எனக் கூறிக் கொண்டிருப்பினும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான முன்னெடுப்பதற்கான உறுதியான செயற்பாடுகள் எதையும்முன்னெடுப்பதாகஇல்லை.அரசியல் நெருக்கடிகள்,அழுத்தங்கள் ஏற்படும் போது நோர்வேத்தரப்பை அழைப்பதும், பின்னர் நோர்வே தரப்பையே இழிவுபடுத்தும் வகையில் நடந்து கொள்வதுமே சனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடகவுள்ளது.

மறுபுறத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பின்னர் அதற்கும் அரசாங்கத்திற்கும் / இராணுவத்திற்கும் தொடர்பில்லை எனவும் அறிவிப்புச் செய்வதுமே அரசாங்கத்தின் அணுகுமுறையாகவுள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்து கிழக்கில் வன்முறை மூலம் விடுதலைப்புலிகளை அரசியல், இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதே நோக்கமாகும். கருணாவின் பெயரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இதன் வெளிப்பாடே ஆகும்.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் இத்தகையதொரு போக்கு இன்று சுமார் இரண்டரையாண்டுகளுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்டதும் சுமார் இரண்டுவருடங்கள் வரை பெரும் நெருக்கடிகள் எதுவும்மற்றதாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த யுத்த நிறுத்த உடன்பாடு பற்றியும் பேச வேண்டியும்அதனை உறுதிப்படுத்துவது பற்றிச் சந்திப்புக்களை நடத்த வேண்டி அவசியத்தையும் உருவாக்கியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் உண்மையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் அரசியற்தீர்விலும் நம்பிக்கை கொண்டதாக இருப்பின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னைய அரசாங்கம் விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தல் வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைக்கென இட்ட தளத்தினை பாதுகாத்தல் வேண்டும்.

சிலவேளைகளில் கடந்த அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளில் புதிய அரசாங்கத்திற்கு உடன்பாடு இல்லாது இருக்கலாம். ஒரு சில வாக்குறுதிகளை புதிய ஆட்சியாளர்கள் தமது மக்களுக்கு வழங்கியும் இருக்கலாம். ஆனால் அவை குறித்துப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கலந்துரையாடப்பட்டு இணக்கம் காணப்பட்டிருத்தல்வேண்டும். இதுவே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான மார்க்கமாக இருந்திருக்கும்.

ஆனால் ஆட்சியாளர்கள் அவ்வாறு நடந்து கொண்டதாக இல்லை. சமாதான முயற்சிகள் மேற்கொள்வதாகக் கூறிக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியற்தீர்வு என்பதற்கென இடப்பட்ட அடித்தளத்தையே தகர்க்க முற்படுகின்றனர். இது சமாதானப் பேச்சுக்கு அடித்தளமிட்ட ஐ.தே.கட்சி மீதான வெறுப்பா? அன்றி இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்பதை நிராகரிப்பதன் வெளிப்பாடா? இதில் எதுவாக இருப்பினும் அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கையானது சமாதானப் பேச்சுவார்த்தையை முன்நோக்கி நகர்த்துவதற்கு ஏதுவானதாக இல்லை.

அவ்வாறு இல்லாது அரசாங்கம் சமாதான முயற்சிகள் தொடர்பான நம்பிக்கையை வளர்த்திருக்குமானால் யுத்தநிறுத்தத்தை உறுதி செயவதற்கான தேவையோ அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து தற்பொழுது எதுவும் கூறுவதற்கில்லை என்றதொரு சூழ்நிலையோ தோற்றம் பெற்றிருக்கமாட்டது. அதாவது சாண் ஏற முழம் சறுக்குவது போல் கடந்து சென்ற இடத்திற்கு மீண்டும் வரவும் மீண்டும் பழையவற்றையேபேசவும், வலியுறுத்தவும் வேண்டிய தேவையும் எழுந்திருக்க மாட்டாது. மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த கேள்வியும் எழுந்திருககாது.

# சபாநாயகர் பதவிவிலக வேண்டும்
## ஆளும் கட்சியின் வேண்டுகை நிராகரிப்பு

மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய தேசிய கட்சியை நிராகரித்துள்ள நிலையில், அக்கட்சியின் உறுப்பினராகப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தனது பதவியில் இருந்து விலகவேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி, நிராகரித்துள்ளது. சனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட சபாநாயகரை பதவி விலகக் கோருவதற்கு, அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருக்க வேண்டும் என அது சுட்டிக் காட்டியுள்ளது. இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அரசியல் காரணங்களுக்காக சபாநாயகர் அவரது பதவியிலிருந்து விலத்தப்பட முடியாது என்பதனை தெளிவுபடுத்தியுள்ளார். தகுந்த காரணங்கள் எதுவும் இல்லாமல் சபா நாயகரை அவரது பதவியில் இருந்து விலத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயலுமானால், அது சனநாயகத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும் எனவும் ஜி.எல்.பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்களில் சபாநாயகரின் தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததன் காரணமாக வி.ஜே.மு. லொக்குபண்டார பதவி விலக வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கோருமானால், 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் தொகுதியில் சுதந்திரக் கட்சி தோல்வியடைந்தமைக்காக சனாதிபதி பதவிவிலகி இருக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி யின் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

## சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை
## ஜாதிக ஹெலஉறுமய ஆதரிக்காது

சிறிலங்காவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகள் மீதாக தாக்குதலில் ஈடுபட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது கடுமையாக நடந்து கொள்ளாமை மாத்திரமே சபாநாயகர் இழைத்த தவறு என ஜாதிக ஹெல உறுமய இவ்விடயம் குறித்து சுட்டிக்காட்டியுள்ளது.

இருந்தபோதிலும் இன்றைய நிலையில் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தேவையற்றது எனக்கூறிய கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர், நாட்டில் அதிகரிக்கும் அத்தியாவசியப் பொருட்களில் விலையை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு கவனம் காட்டவில்லை எனவும் கூறியுள்ளார்.கடந்த அரசான ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்து குறைகூறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தற்போது அதனையும் விட ஆபத்தான பாதையில் சமாதானம் நோக்கி பயணிக்கின்றது எனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

# கருணாவைப் பயன்படுத்தும் அரசின் செயலுக்கு தமிழர் தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபம்

### அவுஸ். உதவித் தூதுவரிடம் தெரிவிப்பு

கருணாவைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தும் படைத்தரப்பின் நடவடிக்கையை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சேபித்துள்ளது அவுஸ்திரேலிய உதவி உயர்ஸ்தானிகர் ஹேட் யோகன் விடுத்த அழைப்பின் பேரில் நேற்று அவரை அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தில் சந்தித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார். இந்த சந்திப்பு நேற்று முற்பகல் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தில் அதேபோல யுத்தநிறுத்த உடன்பாட்டிலும் பற்றுறுதியுடன் இருக்கிறார்கள்.

தற்போது அவர்கள் சமாதான பேச்சுவார்ததைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர்,வடக்கு கிழக்கின் இயல்பு வாழ்க்கைக்காக இடைக் காலக் கட்டமைப்பை கோருகின்றனர், அதேநேரம் கருணாவின் பிரச்சினைக்கு அரசாங்கம் முடிவு காண வேண்டும் என்பதும் அவர்களின் நிபந்தனையாக உள்ளது எனவே இவை இரண்டையும் அரசாங்கம் நிவர்த்தி செய்யும் போது சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதில் சிக்கல் நிலை இருக்காது எனவும் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டிக்காட்டினார், இந்தக் கருத்துக்களைச் செவி மடுத்த அவுஸ்திரேலிய உதவி உயர்ஸ்தானிகர் தமது தனிப்பட்ட அரசியல் கருத்துக்களை பாராளுமன்ற உறுப்பினருடன் பகிர்ந்து கொண்டார். (32)

## பொலிசாரின் பதவி உயர்வுகளை மீள் பரிசீலனை செய்ய

### சனாதிபதிக்கு ஜே.வி.பி. முறையீடு

(கொழும்பு)

இலங்கையின் காவற்துறை பதவி உயர்வுகள் தொடர்பில் ஜே.வி.பி.க்கும் சனாதிபதிக்கு முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது. சனாதிபதியினால் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பட்டியலைக் கொண்டே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாகவும் ஜே.வி.பி கூறுகிறது. அதனால் அதனை மீள் பரிசீலனை செய்யவேண்டும் அந்த கட்சி கோரியுள்ளது. இது தொடர்பான தமது கண்டனக் கடிதத்தை சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜே. வி.பி தரப்பினர் தெரிவித்துள்ளனர். (32)

# சமாதானம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஐ.ம.சு.முன்னணித் தலைவர்கள் ஆராய்வு

அரசாங்கத்தில் இணைவதற்கு முன்னதாக சனாதிபதியை சந்தித்து பேசவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.நேற்று தமது கட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து கலந்துரையாடலில் ஈடுபட்டபோது அதில் பெரும்பாலானோர் இணைந்து கொள்வதற்கான விருப்பத்தை வெளியிட்டதாக அவர் கூறினார்.எனவே அடுத்தகட்ட நடவடிக்கை சனாதிபதியுடனான சந்திப்பின் பின்னரே ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்கள் நேற்று முன்தினம் இரவு சந்தித்து முக்கிய கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். நீண்ட நாட்களுக்கு பின் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அதில் கிடைக்கப்பெற்ற வெற்றி அரசாங்கத்தின் எதிர்கால செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. சனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் தொடர்ச்சி இன்று மாலையும் இடம் பெறலாம் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.நேற்றைய கூட்டத்தில் சமா தான முயற்சிகள் தொடர்பாக முன்னணி கட்சிகள் மத்தியில் இணக்கம் ஏற்பட்டதாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் எனினும் அது எந்த வகையான இணக்கம் என்பதை அவர் வெளியிடவில்லை.

## எதிர்க்கட்சி தலைவர்கள் முக்கிய சந்திப்பு இன்று!


(கொழும்பு)

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் எதிர் கட்சிகளின் தலைவர்கள் இன்று முக்கிய சந்திப்பொன்றை நடாத்தவுள்ளனர். பாராளுமன்ற கட்டடத்தில் இடம்பெறவுள்ள இந்த சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பில் மாகாண சபைத் தேர்தலின் பின்னான அரசியல் சூழல், எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சோதியா படையணியின் 8ஆம் ஆண்டு நிறைவுவிழா

சோதியா படையணியின் 8ஆம் ஆண்டு நிறைவு நாளும் 9 ஆம் ஆண்டு ஆரம்ப நாளையும் முன்னிட்டு நேற்று படையணிக ளுக்கிடையே மூன்று இல்லங்க ளாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டியும், சோதியா படையணி யும் முதல் மாவீரர் வீரவேங்கை இன்குயில் ஞாபகார்த்த மண்டபமும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசியக் கொடியினை ஆர்த்தி ஏற்றிவைக்க, பொதுச்சுடரினை அம்பிகா ஏற்றி வைத்தார். ஞாபகார்த்த மண்ட பத்தினை தளபதி மதுரம் திறந்து வைத்தார். சோதியா படைய ணியின் முதல் மாவீரர் வீரவேங்கை இன்குயிலின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலையினை ரசியப்பிரியா அணிவித்தார். தொடர்ந்து சிறப்புரையை சோதியா படையணியின் மூத்த உறுப்பினரான ஜானகி உரைநிகழ்த்தினார். இத னையடுத்து கலைநிகழ்வுகள் இடம் பெற்றன.



## மூவர் கொலை

முல்லேரியாவில் நேற்று வீடொன்றினுள் வைத்து 03 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்; வீட்டி னுள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களைக் கொலை செய்துவிட்டு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும், நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். அங்கொட ராகம பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். அத் துடன் இச்சம்பவத்துடன் தொடர் புடைய நான்கு பேரை கைது செய்துள்ளதாகவும் முல்லேரியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## நால்வர் காயம்!

(செட்டிகுளம்)

வவுனியா, மன்னார் வீதியில் நேற்று மாலை இடம் பெற்ற வீதி விபத்தில் நான்கு பேர்காயம் அடைந்து வவுனியா பொது மருத் துவ மனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். வவுனியாவில் இருந்து சென்ற உந்துருளியும், மன்னாரில் இருந்து வந்த உந்துரு ளியும் நேருக்கு நேர் மோதி யுள்ளது. இதன்போது உந்துரு களில் சென்ற நான்கு பேரும் காயம் அடைந்துள்ளனர். கிரிஸ்டின் பெர்ணாந்து (30) அனிஸ்டின் டயஸ் (29), நூர்மொகமட் மொனீபர்(10), அசிடோ கிரிஸ்டின் அன்டன்யோன் பஸ்கான் ஆகி யோரே காயம் அடைந்துள்ளனர். (21)

# மன்னாரில் நேற்று மாபெரும் பேரணி

மன்னாரில் நேற்று மாபெரும் பேரணி ஒன்று இடம் பெற்றது. இந்தப் பேரணியை மன்னார் மாவட்டத்திலுள்ள சகல கிறிஸ்த வர்களும் ஒன்றிணைந்து நடாத்தி னார்கள். இந்தப் பேரணியானது காலை 10.00 மணியளவில் மன் னார் புனித செபஸ்ரியார் பேரால யத்திலிருந்து புறப்பட்டு மன்னார் பொலிஸ் நிலையம் ஊடாக மன் னார் கச்சேரி வந்தடைந்தது. இந்தப் பேரணியில் ஏறக்குறைய 15000 பேர் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பேரணி வந்து மன்னார் கச்சேரி வந்தடைந்து மன்னார் அரசாங்க அதிபரிடம் ஒரு மகஜரை கைய ளித்தது. அந்த மகஜரில் மன்னார் மாவட்டத்தை ஒன்றுமையாக நகர்த்த ஒன்று படு வோம். கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மத்தியில் பிரிவி னையை பிரிக்காதே என்று பதா கைகள் தாங்கிய வண்ணம் வந்தார் கள். இந்த மகஜரை முக்கியமாக கிறிஸ்த வர்களையும், இந்துக் களையும் பிரிவினையை உண்டாக் கும் தீய சக்திகளை இனங்கண்டு இவர்களுக்கு சரியாக ஒரு நட வடிக்கை எடுக்குமாறு இந்த மகஜர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## லெப். சீலன் நினைவாக திருமலையில் உதைபந்தாட்டம்

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி லெப்டினன்ட் சீல (சாள்ஸ் அன்ரனி)னின் 21ஆவது வருட ஞாபகார்த்தமாக, திருகோண மலை மாவட்ட தமிழீழ விளை யாட்டுத்துறையின் அனுசரணை யோடு திருகோணமலை உதைபந் தாட்ட லீக் நடத்தும் ஐந்து பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்றுப் புதன்கி ழமை திருகோணமலை மக் ஹெய்சர் விளையாட்டரங்கில் ஆரம்பமானது. ஆரம்பத்தில் லெப். சீலனின் சகோ தரர் ந.புவனேந்திரன் லெப். சீலனின் திருவுருவப் பட்டத்திற்கு ஈகச்சுடரையேற்றி மலர்மாலை அணிவித்தார். விடுதலைப்புலிக ளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் பொதுச்சுடரை முதலா வதாக ஏற்றினார். பின்னர் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப பாளர் சஞ்சீவ், மாகாண விளை யாட்டு அதிகாரி அருண கிரிராசா, திருமலை மாவட்ட துணை அர சியல்துறைப் பொறுப்பாளர் ஜங் கரன் ஆகியோர் பொது ஈகச் சுடரை ஏற்றிவைத்தனர். அதன் பின்னர் முதலாவது போட்டியில் மோதிய பாலையூற்று வி.க.அணியும், சென். அன்ரனிஸ் வி.க. அணியும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சீவ், மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தீபன் ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன்

# நமது ஈழநாடு பத்திரிகையின் கிளைப்பணிமனை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

நமது ஈழநாடு தினசரிப் பத்திரி கையின் கிளை பணிமனை நேற்றுக் காலை 10.45 மணிக்கு கிளிநொச் சியில் திறந்து வைக்கப்பெற்றது.

நமது ஈழநாடு தினசரிப் பணிப் பாளர் சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை ஈழநாதம் மக் கள் தினசரி பிரதம ஆசிரியர் பொ.ஜெயராஜ், புலிகளின்குரல் செய்தி ஆசிரியர் தவபாலன் ஆகி யோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தினைத் தொடர்ந்து நிகழ்வின் முதன்மை விருந்தினரா கக் கலந்துகொண்ட கிளி.மாவட்ட மேலதிக அரசஅதிபர் நா.வேதநா யகம் கிளைப் பணிமனையினை சம்பிருதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார். பணி மனைப்பெயர்ப்பலகையினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தலைமையுரையினை அடுத்து வாழ்த்துரையினை கிளி.கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தி யானந்தம், தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், கிளி.மாவட்ட மேலதிக அரச அதி பர் நா.வேதநாயகம் ஆகியோரும் சிறப்புரையினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், திருமதி.பத்மினி சிதம்பர நாதன், புலிகளின் குரல் பொறுப் பாளர் தமிழன்பன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையினை நமது ஈழநாடு நிறுவனப் பணியாளர் அமல தாஸ் நிகழ்த்தினார். நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஊடகவியலாளர்கள் [illegible]ருமளவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## யுத்தம்...

அங்கு பாதுகாப்புக்கு அச்சு றுத்தல் இல்லை எனவும் அவர்கள் உறுதிப்படுத்தினர். அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வந்ததாக கூறப்படும் நவீன தொலைத் தொடர்பு கருவிகள் சுங்கப்பகுதி யினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனை கடற்படையிடம் ஒப்ப டைக்குமாறு தாம் சுங்க துறையி னரிடம் வேண்டுகோள் விடுத்துள் ளதாக கடற்படைத்தளபதி அங்கு குறிப்பிட்டார். இது நவீன தொலைத் தொடர்பு கருவிகள் என்பதால் அதனை கடற்படையினர் பரீட்சிப் பதே சிறந்தது எனவும் அவர் கூறினார். முல்லைத்தீவுக் கடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயிற்சிகளை மேற்கொண்டு வரு கின்ற போதும்,அந்த பிரதேசத்தில் கடற்படையினர் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆயுதம் ஏந்தியுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளை சமாதான வழியில் திருப்பும் வகையில் படைத்தரப்புகள் பொறு மையுடன் செயற்பட்டு வருவதாகக் கூறிய இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட, ஹிங்குராங்கொட விகாரையில் தங்க வைக்கப்பட் டிருந்த பின்னர் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்ட 14 ஆயுதம்தாங்கிய இளைஞர் களும் இராணுவ பாதுகாப்புட னேயே மட்டக்களப்புக்கு அழைத் துச் செல்லப்பட்டதாக வெளியான தகவல் குறித்து ஊடகவியலாளர் வினவிய போது, அதனை இராணு வத் தளபதி மறுத்தார். (32)

## புலிகளைப்...

பதில் நிபுணத்துவம் பெற்ற இந்த நிறுவனம், சிறிலங்காவில் மீண்டும் போர் இடம்பெறுவது தவிர்க்க முடியாத நிலையை எட்டியிருக்கி றது என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத சிறிலங்காவின் பாது காப்பு அமைச்சின் வட்டாரங்களை ஆதாரம் காட்டி தெரிவித்திருக்கி றது.விடுதலைப் புலிகளை முறிய டித்து வெற்றி கொள்ளும் போர்த் தந்திரோபாயங்களை அமெரிக்கப் படை நிபுணர்களே சிறிலங்கா அரசுக்கு வழங்கி வருவதாகவும் அமெரிக்க அரசாங்கத்தின் அங்கீ காரத்துடனேயே இந்த மறைமுகத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது என்று ஸ்ரற்.்.போர் நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் கூறியி ருக்கிறது. இந்த இரகசியத் திட்டத் தின் விளைவாகவே, மட்டக்களப் பில் இருந்து தப்பியோடிய கரு ணா சில காலம் தலைமறைவாகி யிருந்த பின்னர் மீண்டும் தலை யெடுத்திருக்கிறார் என்றும் ஸ்ரற். போர் நிறுவனம் சுட்டிக் காட்டியி ருக்கிறது. அமெரிக்க - சிறிலங்கா அரசுகளின் இந்த இரகசியக் கூட்டுத் திட்டத்தின் முதல் கட்டமாகவே, கரு ணாவுக்கு வானொலிப் பிரச்சார வசதிகள் செய்து கொடுத்து மக்கள் மத்தியில் குழப்பம் உரு வாக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசு அரச ஊடகங்கள் தவறான பிரச்சாரங்களை மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என்றும் ஊடகர் களுக்கு எதிரான தாக்குல் மற்றும் மிரட்டல்களை மேற்கொள்ளும் படையினருக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும் என் பன உப்பட ஆலோசனைகளையும ஊடகர்கள் அமைப்பு சிறிலங்கா அரசுக்குப் பரிந்துரைத்திருக்கிறது.

## இரு பர்மா நாட்டவர் கைது

(கொழும்பு)

தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பி செல்ல முயன்ற பர்மா நாட்டவர் இருவரை தலைமன்னார் காவல்துறையினர் கைது செய்துள் ளனர் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீரிகம வெளிநாட்டவர் தடுப்பு முகாமில் இருந்து தப்பி சென்ற இவர்கள் இருவரும் மன்னாரில் இருவரின் உதவியுடன் இந்தியாவுக்கு தப்பி செல்ல முயன்றுள்ளனர். இவர்கள் நால்வரையும் கைது செய்த காவல் துறையினர் இன்று மன்னார் நீதவான் மு[illegible]ன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்கள் இருவரையும் எதி[illegible]வரும் வெள்ளிக்கிழமை கங் கொடவல நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். அதேநேரம் கைது செய்யப்பட்ட மன்னார் வாசிகளை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு[illegible] அவர் உத்தரவிட்டார். (32)

## மட்டு...

கிறது என்றார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக நிராயுத பாணிகளாக மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் அரசி யல் வேலைகளை மேற்கொண்டு வருகின்ற எமது போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங் களில் எமது போராளிகள் மீது நடைபெறுகின்ற தாக்குதல்களுக்கு இராணுவமே பொறுப்பு. மட்டக் களப்பில் போராளிகள் மீது தாக்கு தல் நடத்தப்பட்டிருக்கிறது. இந் நிலையில் மக்கள் தமக்கும் இந் நிலைமை உருவாகுமோ என்ற அச்சத்தின் காரணத்தால் அங்கு பதட்[illegible]ம் உருவாகியிருக்கிறது.

[illegible]ளவே இராணுவக் கட்டுப் பாட்[illegible]ப்பகுதிகளில் எமது பாதுகாப் பா[illegible] பகுதிகளில்தான் எமது அர[illegible]யல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் தீர்மானித் திருக்கிறோம் என்றார். (லோ)

## லெப்.கேணல்...

அங்கிருந்து வித்துடல் தாங்கிய பேழை தாண்டியடி மாவீரர் துயிலும இல்லத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் விதைக் கப்பட்டது.இவ் வைபவத்தில் மாவடி முன்மாரிக்கோட்டத் தளபதி றமணன் உட்பட மற்றும் தளப திகள், பொறுப்பாளர்கள், போராளி கள், பொதுமக்கள் எனப் பலர் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டனர்.

இங்லிஸ் வேக்ஷொப்

(கோவிந்தன் கடைச்சந்தியருகில்)

சிறுவர்களுக்கான ஆங்கிலப் பூங்கா

மற்றும்

தொழில் புரிவோருக்கான

இரவு, வாரஇறுதி வகுப்புக்கள் போன்றவற்றிற்குப் பெயர் பதிந்தவர்களும் பதிய இருப்போரும்.

ஞாயிற்றுக்கிழமை
18-07-2004 காலை 9.00மணிக்கு வரவும்.

நிலாந்தன்,
றிச்சர்ட்கமம்,
வில்சன் வீதி

(சி-10022)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.